விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 27 ஞாயிற்றுக்கிழமை (10.05.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 142





# இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற இந்தியப் படையை அனுப்ப முடியாதுள்ளது

## சென்னை வந்த பிரதமர் மன்மோகன் சிங் தெரிவிப்பு



(சென்னை)

இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்புவதென்பது சர்வதேச சட்டங்களுக்கு முரணானது என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)



முள்ளிவாய்க்கால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் காயமடைந்தவர்கள்.

## கப்பல் மூலம் 516 நோயாளர்கள் புல்மோட்டைக்கு அழைத்து வரப்பட்டனர்

### சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தகவல்

(கொழும்பு)

முல்லைத்தீவு போர்ப் பிரதேசத்தில் சிக்கியுள்ள மக்களுக்கு நேற்று கப்பல் மூலம் 25 மெற்றிக் தொன் உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த வியாழக்கிழமையும் நேற்றும் முள்ளிவாய்க்கால் பகுதிக்கு ஒரு தொகுதி மருந்துப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு நேற்று முள்ளிவாய்க்கால் ப்குதியிலிருந்து 516 நோயாளர்கள் புல்மோட்டைக்கு கப்பல் மூலம் அழைத்து வரப்பட்டனர் எனவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ந-5,14)

## இராணுவத் தளபதி வவுனியா விரைவு தளபதிகளுடன் அவசர ஆலோசனை

(வவுனியா)

வன்னியின் தற்போதைய போர்க்கள நிலைமைகள் தொடர்பாக களமுனையில் உள்ள தளபதிகளுடன் ஆராய்வதற்காக இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நேற்று சனிக்கிழமை அவசர பயணம் ஒன்றை மேற்கொண்டு வவுனியா சென்றிருந்தார்.

இராணுவத் தளபதியுடன் இராணுவத் தலைமையக மூத்த அதிகா ரிகள் சிலரும் இந்த ஆலோசனைக்காக வவுனியா சென்றிருந்ததாகவும் கடுமையான பாதுகாப்புக்கு மத்தியில் வவுனியாவில் உள்ள வன்னி இராணுவத் தலைமையத்தில் கூட்டம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னி படைகளின் தலைமையக்த் தளபதி மேஜர் ஜெனரல் (12 ஆம் பக்கம் பார்க்க)

## போர்ப் பகுதி நிலைமைகள் தொடர்பாக அனைத்துலக விசாரணை அவசியம்

### ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் நிபுணர் குழு

(ஜெனிவா)

போர் இடம்பெறும் பகுதிகளில் இடம்பெறக்கூடிய அத்துமீறல் சம்பவங்கள் தொடர்பாக கண்டறிவதற்கான அனைத் துலக குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் நிபுணர்கள் குழு அவசர கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளது.

போர் பகுதிகளின் அண்மைய மாதங்களின் நிகழ்வுகள் தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்கும் தற்போதைய நிலைமைகளை (12ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோ.பிரதிநிதிகள் அடுத்த வாரம் வருவர்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் குழுவொன்று அடுத்த வாரம் இலங்கைக்கு வர இருப்பதாக வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தற்போதைய தலைமைத்துவம், அடுத்து வர இருக்கும் தலைமைத்துவம் மற்றும் ஐரோப்பிய ஆணைக் குழு (12ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்திய இராணுவத் தளபதிகள் போர்க் குற்றவாளிகள்

### விசாரிக்கக் கோருகிறது ம.உ. கண்காணிப்பகம்

வன்னிப் பகுதியில் இராணுவம் மருத்துவமனைகள் மீது எறிகணைத் தாக்குதல்களை நடத்தியிருப்பதாக குற்றம் சாட்டியிருக்கும் அமெரிக்காவின் நியூயோர்க்கை தளமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம், இந்த எறிகணை மற்றும் வான் தாக்குதலுக்கு உத்தரவிட்ட இராணுவத் தளபதிகள் போர் குற்றங்களுக்காக விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்எனத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், 2008 டிசம்பர் மாதத்தின் பின்னர் போர் பகுதிகளில் உள்ள நிரந்தர மற்றும் தற்காலிக (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழ் மக்களுக்கு எங்கள் இதயத்தில் இடமுண்டு

### ராகுல் காந்தி உரை

(சென்னை)

இலங்கைத் தமிழர்களுக்கு எங்கள் குடும்பத்தினரின் இதயத்தில் இடம் உள்ளது. இலங்கை தமிழர் பிரச்சினை ஜனநாயக வழியில் தீர்க்கப்பட வேண்டும். அவர்களுக்கு அனைத்து ஜனநாயக உரிமைகளும் கிடைக்க வேண்டும் என்று அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி கூறினார்.

தமிழக காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து சிவகங்கை மற்றும் திருச்சியில் பொதுக் கூட்டங்களில் ராகுல் பேசினார். அவர் அங்கு பேசுகையில்;

இந்தியாவில் சிறப்பாக செயற்படும் மாநிலங்களில் (12ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை நாளை இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை- திருகோணமலைக்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவை நாளை திங்கட்கிழமை இடம்பெறுமெனயாழ். அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

யாழ் மாவட்ட செயலகத்தில் மே மாத மூன்றாவது கப்பல் சேவைக்கான அனுமதிச் சீட்டினைப் பெற்றுக் (12ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரன் தப்பிச்செல்ல இருந்த நீர்மூழ்கி கைப்பற்றப்பட்டதாம்!

### இராணுவம் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தப்பிச் செல்வதற்குத் தயாராக இருந்த நீர்மூழ்கியைத் தாம் கைப்பற்றியுள்ளதாகப் படைத்தரப்பு அறிவித்துள்ளது. படைத் தரப்பு வெளியிட்ட தகவலில்,

வன்னிப் பகுதியில் விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றிய பகுதிகளில் மேஜர் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய தலைமையிலான படையினர் சோதனை நடத்தினர்.

அங்குலம் அங்குலமாக நடந்த சோதனையில் 360 அடி நீளம் 25 அகலத்தில் உலோகத்தில் வடிவமைக்கப்பட்ட வீடு போன்ற படகை அவர்கள் கண்டு பிடித்தனர்.

மூன்ற பிரிவாக கட்டப்பட்டிருந்த அந்தப் படகு நீர்மூழ்கிகள் (12ஆம் பக்கம் பார்க்க)

# கே.சி.சி.சி வெற்றிக்கிண்ண இறுதியாட்டம்

கொக்குவில் மத்திய சனசமூகநிலைய விளையாட்டுக் கழகத்தினால் ஒவ்வொரு வருடமும் நடத்தப்பட்டுவரும் மட்டுப்படுத்தப்பட்ட (30) ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.


பதினைந்து கழகங்கள் பங்குபற்றிய இச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் யாழ். மாவட்ட விவசாயத்திணைக்களத்தின் உதவி ஆணையாளர் எம்.பற்றிக் டிறஞ்சனும் சிறப்பு விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் ஏ. அகிலதாஸ்சும் கலந்துகொள்ளவுள்ளனர்.


லீக் முறையில் நடத்தப்படுவதும் யாழ் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்த அனைத்து கழகங்களும் இதில் பங்கு கொள்ள முடியும் என்பதும் இச்சுற்றுப் போட்டியின் சிறப்பம்சங்களாகும்.

லீக் முறையில் நடத்தப்படுவதால் இவ்வாண்டும் அனைத்து விளையாட்டுக் கழகங்களில் இருந்தும் பல வீரர்கள் தமது திறமையை வெளிப்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 1991 ஆம் ஆண்டில் இருந்து நடைபெறும் இச்சுற்றுப் போட்டியானது 1996, 2006, 2007 ஆண்டுகளில் நாட்டின் அசாதாரண நிலைமைகள் காரணமாக நடைபெறவில்லை என்றும் இப்போட்டியில் இது வரை யாழ் பல்கலைக்கழக அணி 4 தடவையும், சென்றலைட்ஸ் வி.க - 3 தடவையும், பற்றீசியன்ஸ் வி.க - 3 தடவையும், மானிப்பாய் பரிஸ் வி.க - 2 தடவையும், ஜொனியன்ஸ் வி.க -ஒரு தடவையும், ஜொலிஸ் ரார் வி.க - ஒரு தடவையும், கே.சி.சி.சி. வி.க - ஒரு தடவையும் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ)



சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி



ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக அணி

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச்சிவன் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 13 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு சப்பறமும், 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணி க்கு இரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற் சவமும் 26 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளது. (4-17)

## சைவ சமய அறிவு போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ அரசடி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும் சைவ சமய அறிவுப் போட்டிக்கான பரீட்சை எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக் கி ழமை யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை என ஆலய நிர்வாகத்தினர் அறியத்தந்துள்ளார். (ஓ)

## மகா கும்பாபிஷேகம்

(மருதங்கேணி)

புலோலி மேற்கு சித்தியொல்லை வீரபத்திரர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடை பெறுவதுடன் தொடர்ந்து 1008 சங்காபி ஷேகமும் விசேட பூசைகளும் இடம் பெற வுள்ளது.

இதில் பொன் சுகந்தன் ''ஆலய தரிசனம்'' என்னும் விடயத்தில் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (ஓ-4-35)

## நவக்கிரக தோஷ நிவர்த்தி பூசை

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானத்தில் நவக்கிரக தோஷ நிவர்த்தி பூசை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. தினமும் காலை 6.30 மணிக்கு சங்கல்பத்துடன் ஆரம்பமாகும் தோஷ நிவர்த்தி பூசை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. (ஓ-36)

## தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி டிப்ளோமா நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா 2009- 2010 ஆம் கல்வியாண்டுக்கான நேர்முகப்பரீட்சை வலய ரீதியாக மேலதிக மாகாண கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இதன் பிரகாரம் இம் மாதம் 13, 14,15, 18,19 ஆகிய திகதிகளில் முறையே யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இது சம்பந்தமான அறிவித்தல் தனிப்பட்ட ரீதியாக அனுப்பப்பட்டுள்ளதாக தேசிய கல்வி நிறுவக சிரேஷ்ட விரிவுரையாளரும் பிராந்திய இணைப்பாளருமான திருமதி. த. விஸ்வநாதன் அறியத்தந்துள்ளார். (ஓ)

## யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரம் சுற்றுப் போட்டிகள்

(வட்டுக்கோட்டை)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கரம் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 13, 14 ஆம் திகதிகளில் காலை 8 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

17 மற்றும் 19 வயதுப் பிரிவினர் பங்கு பற்றும் மேற்படி போட்டியில் 13 ஆம் திகதி பெண்களுக்கான போட்டியும் 14 ஆம் திகதி ஆண்களுக்கான போட்டியும் நடைபெறவுள்ளது.

இப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு தவறாது சமூகமளிக்குமாறு யாழ்.மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுக் குழுச் செயலாளரும் வலிகாமம் கல்வி வலய உடற்கல்விப் பணிப்பாளருமான மு.நடராசா கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ-27)

## கலாபூஷண விருதிற்கான விண்ணப்பங் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களமும் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து வருடந்தோறும் கலாபூஷண விருது வழங்கி வருகின்றது.

இதன்பிரகாரம் 2009 ஆம் ஆண்டுக்கான விருதிற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இசை, நடனம், சிற்பம் ஓவியம், நாட்டுக்கூத்து, நாடகம், பத்திரிகை போன்ற பல்துறை சார்ந்த கலைஞர்களும் இவ்விருதிற்கு விண்ணபிக்க முடியும். எனினும் விண்ணப்பதாரிகள் 60 வயதை பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும் எனவும் யாழ். பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கலைஞர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களை யாழ் பிரதேச செயலக கலாசார பிரிவில் பெற்று பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாறும் பிரதேச செயலர் ம.ஜெகூ கேட்டுக்கொள்கின்றார். (ஓ-4-30)

## சுதேச மருத்துவ மாநாடும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியால் நடத்தப்படும் யாழ்ப்பாண சுதேச மருத்துவ மாநாடும் கண்காட்சியும் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியில் இன்று மு.ப.9 மணியில் இருந்து பி.பகல் 5 மணிவரை மூன்று அமர்வுகளாக நடை பெறவுள்ளது.

இவ்விழாவில் 1 ஆம் அமர்வு - சோதிடம் மு.பகல் 9 மணியில் இருந்து மு.பகல் 11.45 மணிவரை கலாநிதி து.மயில்வாகனசிங்கம் தலைமையிலும், 2 ஆம் அமர்வு -மாந்திரீகம் மு.பகல் 11.45 மணியில் இருந்து பி.ப 2.30 மணிவரை கலாநிதி சிவசுப் பிரமணியசர்மா தலைமையிலும், 3 ஆம் அமர்வு - மக்களும் சுதேச மருத்துவமும் - பிற்பகல் 2.30 மணியில் இருந்து பிற்பகல் 5 மணி வரை கலாநிதி பொன். இராமநாதன் தலைமையிலும் நடைபெறவுள்ளது. (ஓ-17)

## தூய பற்றிமா அன்னை பெருவிழா

(ஊர்காவற்றுறை)

பண்டத்தரிப்பு தூய பற்றிமா அன்னை ஆலய வருடாந்த திருவிழா கடந்த 4 ஆம் திகதி திங்கள் மாலை 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் மாலை 4.30 மணிக்கு ஆயத்த் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை காலை திருநாள் திருப்பலியைத் தொடந்து திருச் சொரூப பவனி ஆசீர் ஆகியவற்றுடன் திருநாள் நிறைவு பெறுகின்றது. பற்றிமா பதியில் இதே தினத்தில் பற்றிமா அன்னை பிரான்சீஸ், யசீந்தா, லூசியா ஆகிய சிறுவர்களுக்கு காட்சி கொடுத்ததை நினைவுபடுத்தும் நிகழ்வு இடம்பெறும். (ஓ-72)





யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில் புதிதாக ஆரம்பித்துவைக்கப்பட்ட இலங்கை வங்கியின் தன்னியக்க பணப்பரிமாற்ற நிலையத்தை யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் E.தேவநேசன் திறந்துவைப்பதையும், பணப்பரிமாற்ற நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.(படங்கள் : அலுவலகச் செய்தியாளர்)

# வடமராட்சி கல்வி வலய

## பாடசாலைகளுக்கிடையிலான "கரம்" சுற்றுப் போட்டிகள்

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான 15,19 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலருக்குமான "கரம்" சுற்றுப் போட்டி நாளை திங்கட்கிழமையும், செவ்வாய்க்கிழமையும் காலை 8.30 மணிக்கு யாழ். தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு, போட்டி அட்டவணையில் இடம்பெற்றுள்ள பாடசாலைகள் தவறாது சமூகம் அளிப்பதுடன் போட்டிகள் 2 தனிநபர் ஆட்டங்கள், மற்றும் ஒரு இரட்டையர் ஆட்டங்களையும் கொண்டதாகும். பங்கு பற்றும் பாடசாலைகள் தங்களுக்குரிய கரம்பலகையுடன் சமூகம் தரவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டி அட்டவணையில் இடம்பெற்ற பாடசாலைகளில் பெரும்பாலான பாடசாலைகள் சமூகமளிக்காவிடின் போட்டி நடைபெறும் அன்று 9 மணிக்கு புதிய போட்டி அட்டவணை தயாரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெறும் என்பதையும் போட்டி கட்டணமாக ஒவ்வொரு அணியும் ரூபாய் 150 செலுத்த வேண்டும் எனவும் மத்தியஸ்தர் தீர்ப்பே இறுதியானது.

இதில் மாவட்ட போட்டிக்கு முதல் இரு இடங்களைப் பெற்ற பாடசாலைகள் பங்கு பற்ற முடியும். மாவட்ட போட்டிகளில் 13 ஆம் திகதி பெண்களுக்கான போட்டியும், 14 ஆம் திகதி ஆண்களுக்கான போட்டியும் காலை 8 மணிக்கு யாழ். இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

அத்துடன் உடற்பயிற்சிப் போட்டியில் பங்கு பெற்றும் பாடசாலைகள் தகுந்தாற் போல் போட்டியாளர்களை மாற்றம் செய்யலாம் என வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வே. வல்லிபுரம் அறிவித்துள்ளார். (ஓ-4-19)

## சிறுவர் மகிழ்வகத்தின் இலவச வகுப்புகள்

நல்லூர் சட்டநாதர் வீதியில் உள்ள சிறுவர் மகிழ்வகம் நிறுவனத்தினரால் இலவச சிங்கள, ஆங்கில வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வகுப்புகளில் முதலாம் ஆண்டு தொடக்கம் ஐந்தாம் ஆண்டுவரை கல்வி கற்கும் மாணவர்கள் இணைந்து கொள்ளலாம் என்றும் வகுப்புகள் கிழமை நாட்களில் பிற்பகல் 3.00 மணி தொடக்கம் நடைபெறுமெனவும் சேரவிரும்பும் மாணவர்கள் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

மேலும் சிறுவர்களுக்கான இலகு கணனிப் பயிற்சியும் நூலக சேவை என்பன்வும் நடைபெற்று வருகின்றன. (ஓ-134)

## ஆய்வேடுகளை சமர்ப்பிக்கவும்

யாழ். பல்கலைக்கழக தமிழ் மற்றும் சைவ சித்தாந்த முதுகலைமாணிப் பட்ட மாணவர்களுக்கான ஆய்வேடு சமர்ப்பிக்கும் இறுதி திகதி இம்மாதம் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாகும். எனவே இவ் ஆய்வேடுகள் யாவும் பரீட்சை பகுதியில் ஒப்படைக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-17)

## கோப்சிற்றி திறக்கப்படவுள்ளது

புலோலி ப.நோ. கூட்டுறவு சங்கத்தினரால் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் முன்பாக உள்ள கட்டடத்தில் 4 ஆவது கோப். சிற்றி திறக்கப்படவுள்ளது. இதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-4-35)

## சிறந்த நூல்களுக்கான பரிசில் வழங்கும் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய வட்டத்தின் 43 ஆவது அண்டு நிறைவினையும் இலங்கை இலக்கியப் பேரவையின் வெள்ளி விழா ஆண்டையும் முன்னிட்டு 2006-2007 ஆண்டுகளில் வெளிவந்த சிறந்த நூல்களுக்கான பரிசில் வழங்கும் விழா எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். நல்லை ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்) தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை ஸ்ரீலஸ்ரீ சோமசுநதர பராமாச்சார்ய சுவாமிகளும், அருட்தந்தை சு. ஜெபநேசன் அடிகளாரும் வழங்கவுள்ளதுடன் வாழ்த்துரையை பேராசிரியர் அ. சண்முகதாஸ், ஆறு திருமுருகன், திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அத்துடன் நிகழ்வின் பிரதம விருந்தினராக யா. ப.நோ. கூ. சங்கத்தலைவர் பத்மநாதன் கிரிதரன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக கட்டைவேலி, ப.நோ. கூ. சங்க முகாமையாளர் த. சிதம்பரப்பிள்ளை, அரியாலை ப.தெ.வ.அ.கூ. சங்க முகாமையாளர் ச. புஸ்பராசா, நல்லூர் பிரதேச செயலக சமுர்த்தி தலைமைத்துவ முகாமையாளர் த. சந்திரகாசன், கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்க முகாமையாளர் பொ. யேசுராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 160 | 160 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 130 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 65 |
| தக்காளி | 220 | 250 | 220 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 80 | 65 |
| கோவா | 20 | 30 | 40 |
| கரட் | 40 | 50 | 50 |
| பூசணி | 20 | 30 | 35-45 |
| புடோல் | 100 | 100 | 65 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 30 | 40 | 40 |
| பெரிய வெங்காயம் | -- | -- | 150 |
| பாகற்காய் | 150 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 120 | 130 | 80 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | 60 |
| பயிற்றங்காய் | 80 | 90 | 85 |
| லீக்ஸ் | 120 | 130 | -- |
| பிற்றூட் | 20 | 30 | 30 |
| கறிமிளகாய் | 100 | 110 | 100 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 20 |
| தேசிக்காய் | 120 | 130 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 20-35 |

# வாரம் ஒரு தகவல்

## மருத்துவ சோதிடம்

"ஐயா... சோதிடர் வீடு இதுதானே!"

"ஆமாம். நான் தான் சோதிடர்... உங்களுக்கு என்ன வேண்டும்?"

"ஜாதகம் பார்க்க வேண்டும்."

"உட்காருங்க... உங்களுடைய ஜாதகக் குறிப்பு கெண்டு வந்திருக்கிறீர்களா?"

"இந்தாங்க!"

"இந்தக் காலத்தில் பலர் சோதிடத்தை நம்புவதில்லை. ஆனால் அந்தக் காலத்தில் சித்தர்களுக்கே இதில் நம்பிக்கை இருந்தது. சித்த மருத்துவத்தில் சத்திர விதிவிலக்கு என்று ஒன்று உண்டு. அந்த விதிப்படி அமாவாசைக்குப் பின்னர் குறிப்பிட்ட திகதிகளில் வரும் நாட்களில் மனித உடம்பின் சில இடங்களில் அறுவைச் சிகிச்சை செய்யக்கூடாது."

"சமீபத்தில் கூட மருத்துவ சோதிட இயல் சம்பந்தமாக ஒரு சர்வதேச மாநாடு நடந்தது. அங்கே ஓர் அறுவைச்சிகிச்சை நிபுணர் பௌர்ணமி தினங்களில் அறுவைச் சிகிச்சை செய்யும் போது நோயாளிகளுக்கு வழக்கத்தை விட அதிகளவு இரத்தப் பெருக்கு இருப்பதாகவும் அதற்கு என்ன காரணமென்று சரியாகத் தெரியவில்லை என்றும் கூறியிருக்கிறார். சத்திர சிகிச்சைக்கு முன்னர் சோதிடம் பார்ப்பது நல்லது என்றும் கூறியிருக்கிறார்."

"அப்படியா"

"ஆமாம் அதனால் தான் நான் இப்பொழுது உங்களைத் தேடி வந்திருக்கிறேன். எதிர்வரும் சனிக்கிழமை எனக்கு ஒரு ஒபரேஷன். அது நல்லபடியாக முடியுமா?"

"கவலையே படாதீங்க... உங்களுக்கு ஒன்றும் ஆகாது..."

"எனக்கு ஒன்றும் ஆகாது என்று தெரியும்"

"உங்களுக்குத்தானே ஒபரேஷன்"

"இல்லை"

"அப்படியானால்... நீங்க..."

"அந்த ஒபரேஷன் பண்ணப் போற டாக்டர்"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

10.05.2009
(சித்திரை 27, ஞாயிற்றுக்கிழமை)
பிரதமை முற்பகல் 10.44 மணிவரை
அனுசம் பின்னிரவு 4.11 மணிவரை
இராகுகாலம் 4.24-5.54 மணிவரை
சுபநேரம் 8.54-10.24 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | காரிய தடங்கல், அஜீரணக் கோளாறு, அபகீர்த்தி, போசன சுகம். |
| இடபம் | தெய்வசிந்தை, அபூர்வ சந்திப்பு, எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை. |
| மிதுனம் | ஐஸ்வர்யம், தொழில் சிந்தை, ஆரோக்கியம், முயற்சி கைகூடும். |
| கடகம் | கௌரவக்குறைவு, எதிர்பாராத நன்மை, பணக்குறைவு, உடல் நலக்குறைவு. |
| சிங்கம் | நண்பர்கள் சந்திப்பு, புதிய முயற்சி, சுபசெலவு, மனச்சஞ்சலம். |
| கன்னி | காரிய அனுகூலம், போசன சுகம், உறவினர் வருகை, தெய்வ தரிசனம். |
| துலாம் | வீண்பகை, காரியதாமதம், பணவிரயம், ரோக நிலை. |
| விருச்சிகம் | நல்ல முயற்சி, பெரியோர் உதவி, போசன சுகம், தெய்வசிந்தை. |
| தனுசு | அமைதிக்குறைவு, வாக்கு மேன்மை, பிரயாணம், சுபசெலவு. |
| மகரம் | முயற்சி கைகூடும், விருந்துபசாரம், குடும்ப சுகம், தெய்வசிந்தை. |
| கும்பம் | கடின முயற்சி, பிறர் உதவி, இனிய தகவல், ஆரோக்கியம். |
| மீனம் | கட்டுப்பாடு, வீண்பயம், முயற்சி தாமதம், உறவினர் சந்திப்பு. |

வளவன்

## நிறம் மாறும் நியதிகள்

வாழ்வு
திசை மாறிப் போனதால்
வசந்தங்கள்
வழிமாறிப் போகின்றன

நிஜங்கள்
நிறம் மாறிப் போனதால்
மனங்கள்
ரணமாகிப் போகின்றன

உறவுகள்
உதிர்ந்து போனதால்
உள்ளங்கள்
உருமாறிப் போகின்றன


நினைவுகள்
தொடராகிப் போனதால்
கனவுகள்
கர்ப்பமாகிப் போகின்றன

நியாயங்கள்
தோற்றுப் போனதால்
அநியாயங்கள்
அந்தரங்கமாக
ஆடை
மாற்றிக் கொள்கின்றன

க. நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

திரை விமர்சனம்

# பசங்க



புதிதாக அந்தப் பள்ளிக் கூடத்திற்கு படிக்க வரும் அன்புக்கரசுக்கும், ஏற்கனவே அதே பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் ஜீவா நித்யானந்தத்துக்கும் முதல் சந்திப்பிலேயே முட்டிக் கொள்கிறது. இதில் ஜீவா அவர்களது வகுப்பு ஆசிரியரின் மகன் வேறு. அதனால் அந்த வகுப்பில் படிக்கும் மாணவர்கள் எல்லாம் தனக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமென்று விரும்புகிறான் ஜீவா. ஆனால், ஜீவாவின் எண்ணத்திற்கு எதிரான கருத்துடையவனாக இருக்கிறான் நன்றாகப் படிக்கும் அன்புக்கரசு. அதன் விளைவு.. இரண்டு கோஷ்டிகளாகப் பிரிந்து அன்புவும்,ஜீவாவும் ஒரு பக்கம் அடித்துக் கொள்ள, மற்றொரு பக்கம் அன்புவின் சித்தப்பாவான எல்.ஐ.சி ஏஜென்ட் மீனாட்சி சுந்தரத்துக்கும், ஜீவாவின் அக்கா சோபிக் கண்ணுவுக்கும் இடையில் காதல்.

ஒரு கட்டத்தில் இந்தக் காதலை எதிர் எதிர் துருவத்தில் இருக்கும் இரண்டு சிறுவர்களும் ஒரு சேரப் பார்த்து வீட்டில் பற்றவைத்து விட, ஏற்கனவே குழந்தைகளின் மோதலால் எதிர் எதிர் வீட்டில் இருந்தும் முட்டிக்கொண்டிருக்கும் இரு குடும்பமும் அந்தக் காதலை அங்கீகரித்ததா? அடித்துக் கொண்டதா? சிறுவர்கள் சேர்ந்தார்களா? பெரியவர்கள் பிரிந்தார்களா? என்பதை சுவாரஸ்ய மாகவும், சுவையாகவும் சொல்லியிருக்கிறது மீதிக் கதை!

ஐந்தாம் அல்லது ஆறாம் வகுப்பு படிக்கும் போதே பெயருக்கு பின்னால் ஐ.ஏ.எஸ். எனதான் பின்னால் படிக்கப் போகும் படிப்பை போட்டுக் கொண்டு மற்றவர்களையும்,படிக்கத் தூண்டும் வாத்தியார் விரும்பும் பிள்ளையாக சிறுவன் கிஷோர் கச்சிதம்! வாத்தியார் வீட்டு பிள்ளை ஜீவாவாக வரும் ஸ்ரீராம் பிரமாதம்! இவரது சகாக்கள் பக்கடா,குட்டிமணி, அன்புக்கரசின் தோழி மனோன்மணி, தோழன் மங்களம்,தங்கை தெய்வகனி, இரண்டு வயது தம்பி புஜ்ஜிமா உள்ளிட்ட எல்லோரும் பாத் திரத்திற்கு ஏற்ற தேர்வு.



குழந்தைகள் பற்றிய கதையை மிகவும் அழகாகவும், அழுத்தமாகவும் குடும்பம், காதல் , காமெடி, செண்டிமென்ட் என ஜனரஞ்சகமாகவும், கச்சிதமாகவும் சொல்லி சிறுவர்களின் எதிர் காலக் கனவைத் தூண்டியும், பெரியவர்களின் பள்ளிப் பருவத்து ஞாபகங்களை தூண்டியும் விட்டு, எல்லாத் தரப்பு ரசிகர்களையும் தன் பசங்க படத்தின் மூலம் திருப்திப்படுத்தியிருக்கிறார் புதியவர் இயக்குநர் பாண்டிராஜ். காட்சிக்கு காட்சி சபாஷ் போட வைத்திருக்கிறது ச. பிரேம்குமாரின் ஒளிப்பதிவு! சில இடங்களில் நீளும் சிறுவர்களின் குறும்பை சற்றே படத் தொகுப்பாளர் யோக பாஸ்கர் கவனித்து கத்தரி போட்டிருக்கலாம் எனத் தோன்றினாலும் ஜேம்ஸ் வசந்தனின் பிரமாத இசையில் அதுவும் பெரிய குறையாகத் தெரியவில்லை என்பது உண்மை.

பசங்க: குடும்பத்தோடு பாருங்க!!

## ஸ்ரேயாவின் இலட்சியம்



நடிகை ஸ்ரேயா கந்தசாமி, ஜக்குபாய்,தோரணை, குட்டி, பெயரிடப்படாத இரண்டு படங்கள் என ஆறு படங்களை கைவசம் வைத்துள்ளார்.

இருப்பினும் கவர்ச்சி காட்டி.... காட்டி அலுத்துவிட்டது.இனிமேல் கதையம்சம் உள்ள படங்களில் மட்டுமே நடிப்பதாக இருக்கிறார். தற்போது நடித்துக்கொண்டிருக்கும் எல்லாப் படங்களிலும் தனக்கு முக்கியத்துவமும், நடிக்க நல்ல வாய்ப்புள்ள படமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் கிளாமரும் காட்டத்தான் வேண்டியிருக்கிறது.

போதும் இனிமேலும் போரடிக்க விரும்பாமல்... நல்ல கதாபத்திரங்கள், நல்ல கதையம்சம் உள்ள படங்களில் நடித்து சிறந்த நடிகை என்ற பெயரெடுக்க வேண்டும் என்பதை லட்சியமாகக் கொண்டிருக்கிறார். அதனால் தற்போது கதைகேட்ட மூன்று படங்களை வேண்டாமென்றிருக்கிறார். அவைகளில் தான் நினைத்தது போன்ற கதாபாத்திரம் இல்லை என்பதோடு, கிளாமராகவும் நடிக்கக் கேட்டார்கள். அதனால் மறுத்துவிட்டேன் என்கிறார்.

## அக்சன் காட்சிகள் நிறைந்த பையா




சத்தமில்லாமல் தயாராகி வருகிறது லிங்குசாமியின் பையா. கலக்கலான உடைகளில் படத்தின் ஹீரோ கார்த்தி வந்தாலும் கரடுமுரடான அக்சன் காட்சிகள் படம் நெடுக இருக்கிறதாம். கனல் கண்ணன் படத்தின் ஸ்டண்ட் மாஸ்டர். ஒரு குறிப்பிட்ட சண்டைக் காட்சிக்காக பத்து நாட்கள் பயிற்சி எடுத்திருக்கிறார் கார்த்தி. பயிற்சியே பத்துநாள் என்றால் பைட் எப்படியிருக்கும் என கற்பனை செய்து கொள்ளுங்கள்.

படத்தின் மெயின் வில்லன் மிலிந்த் சேமன். பச்சைக்கிளி முத்துச்சரத்தில் சரத்குமாரை சித்திரவதை செய்யும் அதே ஆள் தான். பையா மிலிந்துக்கு இரண்டாவது தமிழ்ப் படம். தமிழ் ஆர்வலர்கள் பாராட்டும் ஒரு வேலையை இந்தப் படத்தில் செய்திருக்கிறார் லிங்குசாமி.

தமிழ் அதிகம் தெரியாத மிலிந்த் சோமனை சொந்தக் குரலில் டப்பிங் பேச வைத்திருக்கிறார்.


## வித்தியாசமான கேரக்டர்களில் அசத்தும் ஆர்யா



வித்தியாசமான பாத்திரங்களில் நடிப்பதென தீர்மானித்திருக்கிறார் ஆர்யா. நான் கடவுளில் இதுவரை தமிழ் ஹீரோ யாரும் நடித்திராத அகோரி கேரக்டர். இவர் நடித்து அடுத்து வெளிவர இருக்கும் படம் சர்வம். இது காதலும் திகிலும் கலந்த படம். புதிய ஆர்யாவை இதில் பார்க்கலாம் என்று அடித்து கூறுகிறார் விஷ்ணுவர்தன். அதையடுத்து விஜய்யின் மதராசப்பட்டிணம். சுதந்திர காலகட்டத்து கோபக்கார இளைஞனாக நடிக்கிறார் ஆர்யா.

தெலுங்கில் குணசேகர் இயக்கும் படத்தில் ஆர்யாவுக்கு வில்லன் வேடம். வித்தியாசமான .பாத்திரங்களுக்கு நடுவில் லவ் ஸ்டோரி ஒன்றுக்கும் கால்ஷீட் கொடுத்திருக்கிறார். தாம்தூம் படத்தில் ஜீவா முடிக்காமல் விட்ட பகுதிகளை இயக்கிய மணிகண்டன் அடுத்து இயக்கும் படம் சிக்கு புக்கு. ஆர்யா ஹீரோ. இரண்டு ஹீரோயின்கள். ஒருவர் ஸ்ரேயா. இன்னொருவர் பிருத்திகாராவ்.

## கம்ப்யூட்டர் என்ஜினியரை மணக்கிறார் -நடிகை மீனா



நடிகை மீனா பெங்களூரை சேர்ந்த கம்ப்யூட்டர் என்ஜினியரை திருமணம் செய்யவுள்ளார். சிவாஜிகணேசன் நடித்த நெஞ்சங்கள் படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர் நடிகை மீனா. ஒரு புதிய கதை என்ற படத்தின் மூலம் கதாநாயகியானார். தொடர்ந்து என் ராசாவின் மனசிலே படத்தில் ராஜ்கிரண் ஜோடியாக நடித்தார். ரஜினிகாந்த் ஜோடியாக எஜமான் படத்தில் நடித்ததன் மூலம் முன்னணி நடிகைகள் வரிசையில் இடம்பிடித்தார். கமல்ஹாசன், விஜயகாந்த், சரத்குமார் என அனைத்து முன்னணி நடிகர்களுடன் ஜோடி போட்டுள்ள மீனாவுக்கு தொடர்ந்து பட வாய்ப்புகள் கிடைக்காததால் டி.வி. சீரியல் பக்கம் திரும்பினார்.

தற்போது கல்யாணம் என்ற தொடரில் நடித்து வரும் மீனாவுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது. இவருக்கும் பெங்களூரை சேர்ந்த கம்ப்யூட்டர் என்ஜினியர் வித்யாசாகர் என்பவருக்கும் எதிர்வரும் ஜூலை மாதம் 12 ஆம் திகதி திருப்பதியில் திருமணம் நடைபெற உள்ளது. திருமண வரவேற்பு நிகழ்ச்சி ஜூலை 14 ஆம் திகதி சென்னையில் நடைபெறுகிறது.

## பொலிஸ் அதிகாரியாக நடிக்கும் நமிதா



தமிழில் கவர்ச்சி நடிகையாக கலக்கிய நமீதா தெலுங்கில் தயாராகும் “ தேசதுரோகி” படத்தில் பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார்.

இதற்காக கடும் உடற்பயிற்சி செய்து 7 கிலோ எடை குறைத்துள்ளார். சண்டைப் பயிற்சிகளும் கற்றுள்ளார்.தமிழில் தயாரான விஜயசாந்தியின் பழைய வைஜெயந்தி ஐ.பி.எஸ். பட ரீமேக்கில் சினேகா பொலிஸ் வேடத்தில் நடிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களின் பொலிஸ் “ கெட்டப்” விஜயசாந்தி அளவுக்கு வருமா? என்று சந்தேகம் கிளம்பியுள்ளது. ஆனால் அவரை விட சிறப்பாக நடித்து பெயர் வாங்கவேண்டும் என்பதில் கவனமாக இருக்கின்றனர்.

விஜயசாந்தி போல் உங்கள் நடிப்பு இருக்குமா என்று நமீதாவிடம் கேட்ட போது ஆவேசப்பட்டார்.அவர்கூறியதாவது,

முதல் தடவையாக பொலிஸ் வேடத்தில் நடிக்கிறேன் என்னை சந்திப்பவர்கள் விஜயசாந்தி மாதிரி நடிப்பீர்களா என்று கேட்கின்றனர். இது எனக்கு கோபத்தை தான் ஏற்படுத்து கிறது. நான் மற்றவர்கள் மாதிரி நடிக்க வேண்டிய அவசியம் இல்லை. நானாகத் தான் நடிப்பேன் என்றார்.

# புல்மோட்டை மருத்துவமனைக்கு மேலும் 493 பேர் அழைத்து வரப்பட்டனர்

(கொழும்பு)

முல்லைத்தீவு யுத்த சூனியப் பிரதேசத்திலிருந்து 493 பேர் கடந்த வியாழக்கிழமை புல்மோட்டையிலுள்ள இந்திய கள மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வழித்துணையுடன் இவர்கள் கிறீன் ஓசன் கப்பல் மூலம் வியாழக்கிழமை இரவு 8 மணியளவில் புல்மோட்டையை வந்தடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இவர்களுள் காயமடைந்தவர்களும், நோயாளிகளும், உறவினர்களும் உள்ளடங்குகின்றனர். மேற்படி கப்பல் முல்லைத்தீவு முள்ளி வாய்க்கால் பிரதேசத்திலிருந்து பி.ப 6 மணிக்கு புறப்பட்டு இரவு 8.00 மணியளவில் புல்மோட்டையை வந்தடைந்தது. இதுவரை 20 தடவைகளில் புல்மோட்டைக்கு 9ஆயிரத்து 572 பேர் இக் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காயமடைந்தவர்களுக்கும் நோயாளிகளுக்கும் இந்திய கள வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் மேலதிக சிகிச்சை தேவைப்படுவோர் பதவியா, மதவாச்சி, அனுராதபுரம், கெக்கிராவ, தம்புள்ள போன்ற வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டு வருகின்றனர்.

இவர்களின் உறவினர்கள் சம்பந் நுவர, வவுனியா, ஓமந்தை போன்ற நலன்புரி நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். (ஓ-6)

# இலங்கையின் நிராகரிப்பு ஏமாற்றம் அளிக்கிறது

## கனேடிய வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

மோதல் இடம்பெறும் பகுதியில் சிக்குண்டுள்ள மக்களுக்கு உதவும் வகையில், யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளுமாறு கனடா விடுத்த கோரிக்கையை முற்றுமுழுதாக இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளமை ஏமாற்றம் அளிப்பதாக கனடிய வெளிவிவகார அமைச்சர் லோரன்ஸ் கெனோன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் மாதக்கணக்கில் யுத்த நிறுத்தம் குறித்து கோரிக்கை விடுத்தோம். பாதிக்கப்பட்ட மக்கள் அடிப்படை மருத்துவ வசதிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றார்.

இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறு பல்வேறு நாடுகள் விடுத்த கோரிக்கையை இலங்கை நிராகரித்தமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே கனேடிய வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். (ஓ-6)

# இடம்பெயர்ந்துள்ள கர்ப்பிணித் தாய்மார்களுள் 350பேர் அடுத்த மாதம் குழந்தை பிரசவிக்கலாம்

## ஐ.நா. சனத்தொகை நிதியம் தெரிவிப்பு

(கொழும்பு)

மோதல்கள் இடம்பெறும் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள மூவாயிரம் கர்ப்பிணித் தாய்மார்களில் சுமார் 350 பேர் அடுத்த மாதம் குழந்தைகளைப் பிரசவிக்கக் கூடும் என்றும் ஐ.நா. சனத்தொகை நிதியம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு மோதல்களினால் பாதிக்கப்பட்டுள்ள கர்ப்பிணித் தாய்மாாகள் மற்றும் சிறுவர்களுக்கு நிவாரணமளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் செய்திச் சேவைக்கு சனத்தொகை நிதியம் மேலும் தெரிவித்துள்ளது.

மோதல்களினால் சுகாதார சேவைக்கு ஏற்பட்டுள்ள சிறுசிறு தடைகளுக்கு மத்தியில், கர்ப்பிணித் தாய்மார்களுக்குத் தேவையான சுகாதார வசதிகளை செய்து கொடுக்க ஐ.நா. சனத்தொகை நிதியம் முன்வந்துள்ளது.

மோதல்கள் இடம்பெறும் பகுதிகளில் இருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்துள்ள கர்ப்பிணித் தாய்மார்களினதும், சிறுவர்களினதும் சுகாதார நலன்களைக் கருத்திற் கொள்ள வேண்டும் என இந்நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி லீன்கே கிரிஸ்டியன்சன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்துள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இரத்தம் தேவைப்படுகின்றது. எனவே, அவர்களுக்கு அவசர சிகிச்கைகள் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக சனத்தொகை நிதியம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, மோதல்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் அவசர மனிதாபிமானத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஐ.நா.வின் சனத்தொகை நிதியம் ஒரு மில்லியன் டொலர்கள் நிதியினைத் திரட்டத் திட்டமிட்டுள்ளது. (ஓ-6)

# இராணுவம் மீண்டும் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தி பொதுமக்கள் மீது தாக்குதல்

## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

இலங்கை இராணுவம் மீண்டும் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவதாக யுத்த சூன்ய வலயத்திலிருந்து தகவல்கள் கிடைக்கப் பெறுவதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.


புதுக்குடியிருப்பு பிரதேச ஆனந்தபுரம் பகுதியில் முதல் தடவையாக இராணுவம் புலிகள் மீது இரசாயன ஆயுதங்களை பிரயோகித்ததாகவும் இந்த தாக்குதலின் போது சுமார் 250 பேர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதன் பின்னர் இரசாயன ஆயுதப் பயன்பாடு நிறுத்தப்பட்ட போதிலும் கடந்த வாரம் மீண்டும் இரசாயன ஆயுதங்களை அரசாங்க இராணுவம் பயன்படுத்தி தாக்குதல் நடத்தி வருவதாக குறிப்பிடப்படுகிறது.

இந்திய தேர்தல்களின் போது அரசாங்கத்திற்கு பாதகமான கட்சிகள் ஆட்சியமைத்தால் போரை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படக் கூடும் என்ற காரணத்தினால் இந்திய தேர்தல்களுக்கு முன்னர் யுத்தத்தை நடத்தி முடிக்க அரசாங்கம் அதிக தீவிரம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)


# இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய 2008 உயர்தர பரீட்சையில் "3A, 2AB" சித்தி பெற்ற வடமராட்சி கல்வி வலய மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு -01.05.2009

## பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி














Lifeline

# மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

# அரசினால் உதவி வழங்கும் நாடுகளுக்கு விளக்கமளிக்கும் மாநாடு

இடம்பெயர்ந்த மக்களது அடிப்படை வசதிகள், கல்வி, சுகாதாரம் போன்றவற்றை முன்னெடுக்க அரசுக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பும் சில உதவி வழங்கும் நாடுகளும் முன்வந்துள்ளன. கடந்த மே மாதம் 4 ஆம் திகதி கொழும்பில் உதவி வழங்கும் நாடுகளுக்கு விளக்கமளிக்கும் மாநாடு ஒன்று இடம்பெற்றிருந்தது.

இந்தச் சந்திப்பின் நோக்கம் குறித்து இம்மாநட்டில் கலந்து கொண்ட மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க அவர்களிடம் வினவிய போது பல உதவி வழங்கும் நாடுகளின் உறுப்பினர்களும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தைச் சேர்ந்த பலரும் பங்கு பற்றியதாகவும் பல முக்கிய விடயங்கள் பற்றி ஆராயப்பட்டதெனவும் தெரிவித்தார்.

ஐம்பது மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிட்டத்தட்ட 5 பில்லியன் ரூபாவை வழங்குமாறு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உதவி வழங்கும் நாடுகளிடம் கோரியுள்ளது. இவ்வுதவி உணவு, வதிவிடம், நீர் மற்றும் மலசலகூட வசதிகள், போசாக்கு போன்றவற்றிற்குப் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தரப்பிற்கு இப்பணம் கிடைத்தவுடன் அதனை அரசாங்கத்துடன் இணைந்து ஆலோசனை நடத்திய பின்னர் பயன்படுத்துமாறு கோரப்பட்டுள்ளதாகவும் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள தேசிய திட்டத்திற்கமைய இந்த நிதியை உபயோகிக்க உள்ளதாகவும் இந்த நிதிஉதவியானது ஏற்கனவே அரசாங்கம் ஒதுக்கியுள்ள நிதிக்கு மேலதிகமானது எனவும் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

மேலும் உதவி வழங்கும் நாடுகளுக்கு தாம் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுவது யுத்தத்தின் பின்னரான நிலைமை போன்ற விடயங்கள் பற்றிய அரசாங்கத்தின் கொள்கைகள் குறித்து விளக்கம் கொடுத்துள்ளதாகவும் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களில் சர்வதேசத் தரத்தை எதிர்பார்க்கும் உதவி வழங்கும் நாடுகள் முக்கியமாக ஐ.நா போன்ற அமைப்புகள் தாம் இடம்பெயர்ந்த முகாம்களில் நடைமுறைப்படுத்தும் திட்டங்களில் சர்வதேச தராதரத்தினைக் கடைப்பிடிக்க வேண்டுமென தான் அவர்களிடம் தெரிவித்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.



மெனிக்பாம் முகாமில் உள்ள சிறுவர்கள் வரிசையில் நிற்பதைப் படத்தில் காணலாம்.

வவுனியாவில் சில வலயங்களை சர்வதேச சமூகம் பராமரித்து வருகின்றது. இந்நிலையில் அவற்றின் தராதரம் மேலும் உயர்த்தப்படவேண்டுமெனவும் வதிவிடம், நீர் மற்றும் மலசலகூட வசதிகள் போன்றவற்றில் அவர்கள் ஆற்றியுள்ள பங்களிப்பு போதாது எனவும் இவ்வாறான விடயங்களை அவர்கள் அதிகமாக செய்ய வேண்டுமென கூறுகின்ற அதே வேளை தாமும் கடினமாக உழைக்க வேண்டியது அவசியம் என அமைச்சர் குறிப்பிட்டார்.

எல்.ரீ.ரீ.ஈயினரின் பகுதியிலிருந்து துன்பங்களை அனுபவித்து அங்கிருந்து வெளியேறி அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்தடைந்த இம்மக்களுக்கு புதிய வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கான சந்தர்ப்பத்தை நாம் வழங்க வேண்டும்.

இவர்கள் பல துன்பங்களை அனுபவித்துள்ளனர். இவர்கள் முன்னர் வாழ்ந்த வாழ்க்கையை விட சிறந்த வாழ்க்கையை வாழ்வதற்கு நாம் உதவ வேண்டும்.

> நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களில் சர்வதேசத்தரத்தை எதிர்பார்க்கும் உதவி வழங்கும் நாடுகள் முக்கியமாக ஐ.நா. போன்ற அமைப்புகள் தாம் இடம்பெயர்ந்த முகாம்களில் நடைமுறைப்படுத்தும் திட்டங்களில் சர்வதேச தரத்தினைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இவர்களுக்கு சிறந்த சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும். இவற்றையெல்லாம் அடைவதற்கு நாம் அனைவரும் கூட்டாக இணைந்து உழைக்க வேண்டியது அவசியம் என அமைச்சா மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

"மீண்டும் வாழ்வோம்" நிகழ்ச்சியானது சூரியன் எவ்.எம். வானொலியூடாக தினமும் இரவு 9.00 மணி முதல் 10.00 மணி வரையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தேசிய சேவையில் திங்கள் முதல் வெள்ளி வரை இரவு 9.30 மணிமுதல் 9.45 மணி வரையும் ஒலிபரப்பாகின்றது. எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை (WWW. Internews. lk) என்ற இணையத்தளத்திலும் தரவிறக்கம் செய்யலாம்.

# அரசின் கடமைகளை உயர் மட்ட பிரதிநிதிகள் நினைவு படுத்த வேண்டிய தேவையில்லை

## மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க



மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க

ஐக்கிய நாடுகள் அவசர மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான விசேட பிரதிநிதி ஹோம்ஸ் அவர்கள் இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அவரது விஜயத்தின் நோக்கம் குறித்து அறிந்து கொள்ள மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க அவர்களை நேர் கண்டுள்ளோம்.

**ஜோன் ஹோம்ஸின் இலங்கை விஜயத்தின் நோக்கம் குறித்து உங்களால் தெரிவிக்க முடியுமா?**

இலங்கை அரசின் அழைப்பின் பேரில் ஜோன் ஹோம்ஸ் மீண்டும் இலங்கைக்கு வருகை தந்துள்ளார். அவருடனும் ஏனைய ஐக்கிய நாடுகளின் முக்கிய பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தோம். அந்தக் கலந்துரையாடல் மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

இந்தச் சந்திப்பின் போது இலங்கையில் இடம்பெயர்ந்த மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் 10 மில்லியன் அமெரிக்க டொலரை உடனடியாக வழங்குவதற்கு இணங்கினார். இந்த நிதி உதவியானது இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகள் மூலம் இடம் பெயர்ந்த மக்களின் நலன்களைப் பேணுவதற்கு பயன்படுத்தப்படவுள்ளது.

மனிதாபி மான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு மேலும் உதவிகளை பெற்றுக் கொள்ளும் நோக்கில் நன்கொடை வழங்குபவர்களை சந்திப்பதற்கான தீர்மானத்தையும் எடுத்திருக்கின்றோம்.

அந்த வகையில் இந்த ஆண்டு நாங்கள் 150 மில்லியன் டொலர் அளவிலான நிதியினை மனிதாபிமான உதவித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க் கின்றோம்.

எனினும் தற்போதைய நெருக்கடியான சூழலில் வளங்களுக்கான அவசரத் தேவை ஏற்பட்டுள்ளதன் காரணமாக நாங்கள் உடனடித் தேவைக்கான கோரிக்கைகளை கொடையாளிகளிடம் முன்வைக்கவுள்ளோம்.

அவசர நிலைமைகளுக்கமைய அரச கட்டுப்பாட்டு பகுதிக்கு வருகின்ற ஆயிரக்கணக்கான மக்களுக்குத் தேவை யானவற்றை வழங்குவதற்கான நிதி யினை எம்மால் ஒருங்கிணைக்க முடி யும் என நாம் நம்புகின்றோம்.

**இடம்பெயர்ந்தவர்களின் வாழ்க்கை நிலையை எவ்வாறு மேம்படுத்த முடியும் என நினைக்கின்றீர்கள்?**

அவருடைய விஜயத்திற்கு அப்பால் இடம்பெயர்ந்த மக்களின் நலன்களைக் கவனிப்பதற்கும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் அரசாங்கம் பூரண அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது என்பதை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்நிலையில் எமது கடமைகள் குறித்து உயர்மட்ட பிர திநிதிகள் எமக்கு நினைவூட்டத் தேவை யில்லை என்றே கருதுகின்றேன். ஆனால் நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல ஜோன் ஹோம்ஸின் இந்த விஜயம் நிதியினையும் வளங்களையும் ஒருங்கிணைப்பதில் உதவியாக இருக்கும். அத்தோடு அவரது கருத்துக்களையும் கவனத்தில் கொள்ள தயாராகவிருக்கின்றோம். காரணம் அவர் ஒரு அனுபவம் மிக்க மனிதர்.

நாங்கள் எப்போதுமே அவருடன் இருந்து சவால்களை சந்திப்பதற்கான வழிமுறைகள் குறித்து கலந் துரையாடத் தயாராகவுள்ளோம். முகாம்களில் உள்ள மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவது குறித்து அவரால் வழங்கப்படக்கூடிய ஆலோசனைகளையும் பரிசீலனைகளையும் ஏற்றுக் கொள்கின்றோம். அத்தோடு அவர்களுடைய வாழ்வை மேம்படுத்துவதற்கான எங்களுடைய பணிகளையும் தொடர்ந்து முன்னெடுக்கின்றோம்.

**பாதுகாப்பு வலயத்திற்கு மனிதாபிமானத் தொண்டர் பணியாளர்களை அனுப்புவது குறித்த ஏதேனும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றதா?**

பாதுகாப்பு வலயத்திற்கு தமது ஒன்றிரண்டு பணியாளர்களை அனுப்புவதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு கோரியிருக்கின்றது. அந்தக் கோரிக்கை எம்மால் ஏற்றுக்கொள்ளக் கூடியது என தெரிவித்திருக்கின்றோம்.

ஏனெனில் இதற்கு முன்னரும் நாங்கள் அவ்வாறு ஐக்கிய நாடுகளின் பணியாளர்களை பாதுகாப்பு வலயத்திற்கு அனுப்பி வைத் திருக்கின்றோம். ஆகவே ஐக்கிய நாடுகள் பணியாளர்களுக்கு அங்கு செல்ல அனுமதி வழங்குவது இலங்கையைப் போன்று கொள்கைகளைக் கொண் டுள்ள எந்தவொரு நாட்டிற்கும் பிரச்சினையாக இருக்காது.

ஆனால் அங்கு செல்வது குறித்து நடைமுறை விடயங்களைப் பற்றி நாம் கலந்துரையாட வேண்டியுள்ளது. காரணம் அங்கு செல்வது எளிதல்ல. அங்கு மோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆகவே அங்கு செல்லவுள்ள ஐக்கிய நாடுகளின் பணியாளர்களின் பாதுகாப்பு குறித்தும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

**பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியேறியவர்களுடைய தற்போதைய நிலை எவ்வாறுள்ளது?**

ஓமந்தைக்கு வந்தவர்கள் தற்போது வவுனியாவிலுள்ள முகாம்களில் உள்ளார்கள். ஏனையவர்களை வேறு இடங்களுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்துள்ளோம்.

அவர்களைத் தங்க வைப்பதற்கு வேறு மாவட்டங்களில் இடங்களைத் தேடிக் கொண்டு இருக்கின்றோம். தற்போது ஒரு இலட்சம் பேர் வரை இடம் பெயர் முகாம்களில் உள்ளனர். அநேகமானவர்கள் வவுனியாவில் தான் தங்கியுள்ளார்கள். தற்போது அவர்களைத் தங்க வைக்க வேறு இடங்களை இனங்காணும் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

**உங்கள்எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்**

மீண்டும் வாழ்வோம்
தொடர்பான உங்கள்
மேலான எண்ணங்களையும்
படைப்புக்களையும் எதிர்பார்க்கிறோம்
நீங்கள் ஓவியம் வரையும் ஆற்றல் மிக்கவர் எனில்
உங்கள் அனுபவங்களை சித்தரிக்கும் ஓவியங்களை
வரைந்து எமக்கு அனுப்பி வையுங்கள்
அவற்றை மீண்டும் வாழ்வோம்
பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கிறோம்.

த.பெ.இல.1039 கொழும்பு
தொ.பே. -0774952242
மின்னஞ்சல்-info@lifeline srilanka.com

**மீண்டும் வாழ்வோம்**

"மீண்டும் வாழ் வோம்" திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள் குடியேறி உள்ளவர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்து பட்ட மனிதாபிமான செயற்றிட்ட அமைப்புக்களின் ஓர் அங்கமாகும்.

# யாழ்ப்பாண மாவட்ட விவசாய நடவடிக்கைகளில் செல்வாக்கு செலுத்தும் காலநிலைக் காரணிகள்

03

**யாழ்ப்பாணக் குடாநாட்டு விவசாயத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் காலநிலைக் காரணிகள்**

யாழ்ப்பாணக் குடாநாட்டு விவசாயம் காலநிலைக் காரணிகளுடன் குறிப்பாக மழைவீழ்ச்சியுடன் மிக நெருக்கமான தொடர்பினைக் கொண்டுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் விவசாய வரலாற்றில் கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னர் காலநிலைக் காரணிகளால் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்படுவது ஒப்பீட்டு ரீதியில் குறைவாகும். ஆனால் அண்மைக்காலத்தில் இதன் பாதிப்பு மிக அதிகமாகக் காணப்படுகின்றது. குறிப்பாக 2008 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் குடாநாடடின் விவசாயத்துக்கு மிகவும் பாதிப்பான ஆண்டாகக் காணப்படுகின்றது.

2008 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் கிடைத்த அதிகூடிய மழைவீழ்ச்சியின் (249.7 mm) காரணமாக அதிகளவிலான பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந்தன. தேங்கி நின்ற வெள்ளத்தினால் பெருமளவான பயிர்கள் அழிவுற்றதுடன் விளைச்சல் தரக்கூடிய நிலையில் இருந்த பல்வேறு வகையான மரக்கறிகளும் பாதிப்புக்குட்பட்டிருந்தன எனலாம். இதனால் மார்ச் மழைவீழ்ச்சியின் பின்வந்த காலப் பகுதிகளில் மரக்கறிகளின் விலை யாழ்ப்பாணக் குடாநாட்டில் கணிசமாக அதிகரித்து இருந்தது. இந்த வகையில் யாழ்ப்பாண மாவட்ட விவசாய விரிவாக்க பிரதிப்பணிப்பாளரின் அறிக்கைப்படி பின்வரும் சேதங்கள் 2008 மார்ச் மாத மழைவீழ்ச்சியினால் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கலாம்.

**2008 மார்ச் மாத மழைவீழ்ச்சியினால் ஏற்பட்டுள்ள சேதங்கள்**

| பயிர்கள் | செய்கை பண்ணப்பட்ட பரப்பு ( ha இல்) | அழிவுகள் (மில்லியன்) ரூபாயில் |
|---|---|---|
| மிளகாய் | 245.7 | 234.25 |
| வெங்காயம் | 501 | 309.32 |
| புடோல் | 633 | 563 |
| மரக்கறி | 993.45 | 767.65 |
| பயறு | 157 | 68 |
| உழுந்து | 198.2 | 145 |
| கௌபி | 253 | 186.75 |
| நிலக்கடலை | 127.75 | 15.73 |
| கத்தரி | 159 | 102 |



இது யாழ்ப்பாண மாவட்டத்தின் பொதுவான புள்ளிவிபரமாகக் காணப்பட ஒவ்வொரு விவசாயப் போதனாசிரியர் பிரிவிலும் இதன் அளவு வேறுபட்டுக் காணப்படுகின்றது. இதில் தொல்புரம் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் 362.35 ஹெக்ரெயரிலான பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டதுடன் ஆயிரத்து 598 விவசாயிகளும், புத்தூர் போதனாசிரியர் பிரிவில் 2 6ஆயிரத்து 914 ஹெக்ரெயர் பயிர்ச்செய்கையும் 3 ஆயிரத்து 398 குடும்பங்களும், கைதடியில் 150 ஹெக்ரெயர்' பயிர்ச்செய்கையும்2ஆயிரத்து 693 குடும் பங்களும் பாதிக் கப்பட்டுள்ளன.


2008 மார்ச் மாதத்தில் கிடைத்த மழைவீழ்ச்சிக்கு அயன் இடை ஒருங்கல் வலயத்தின் இடமாற்றச் செயற்பாட்டினால், வங்களா விரிகுடாவில் ஏற்பட்ட தாழமுக்கமேபிரதான காரணமாகக் குறிப்பிடலாம். எனினும் இம்மழை யாழ்ப்பாண மாவட்ட மழைவீழ்ச்சியில் அசாதாரணமான ஒன்றாகும். ஏனெனில் எப்பொழுதுமே மார்ச் மாதம் யாழ்ப் பாணக் குடாநாட்டின் இடை வரட்சிப் பருவத் துக்குரியதாகும். எனினும் 2008 மார்ச் மாதத்தில் கிடைத்த மொத்த மழைவீழ்ச்சி 249.7 mm ஆகும்.

**வரட்சி**

இதன்பின்பு 2008 யூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர், ஒக்ரோபரின் முற்பகுதிகளில் வழமைக்கு மாறான வெப்பநிலை நிலவியது. இதனால் யாழ்ப்பாணக் குடாநாட்டின் விவசாய நடவடிக்கையில் குறிப்பாக நெற்பயிர்களின் ஆரம்ப வளர்ச்சி யை இது பாதித்தது. அநேக மானவயல்நிலங் கள்நீரற்றுவரண்டிருந்தமை குறிப் பிடத் தக்கது. எனினும் இதன் தாக்கம் அதிகமா கக் காணப்பட வில்லை.

**நிஷா**


யாழ்ப்பாணமாவடத்தில் கடந்த 50 ஆண்டு காலமாக ஏற்பட்டிராத காலநிலை அனர்த்தம் 2008 நவம்பர் 24,25, 26, 27களில் ஏற்பட்டது. இக்காலப் பகுதியில் ஏற்பட்ட நிஷா புயலினால் யாழ்ப்பாண மாவட்டத்தின் அனைத்துத் துறைகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. குறிப்பாக விவசாயத் துறையில் மிக அதிகமான பாதிப்பினை ஏற்படுத்தியது. இதனால் நிஷாவினைத் தொடர்ந்து வந்த இரண்டு மாத காலப் பகுதியில் யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாயப் பொருட்களுக்கு மிகுந்த தட்டுப்பாடு ஏற்பட்டது.




**நா. பிரதீபராஜா**
விரிவுரையாளர்,
புவியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்.


நிஷா புயலினால் எற்பட்ட விவசாயப் பாதிப்புகள் மிக அதிகமாகக் காணப்பட்டன. யாழ்ப்பாணக் குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாயத் துறைக்கு எற்பட்ட பாதிப்புக்களை நோக்கும்போது பின்வரும் பாதிப்புக்கள் அறியப்பட்டுள்ளது.

(தொடரும்)



அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினால் கந்தர்மடம் இந்துசமயப் பேரவை ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கோயிலில் அண்மையில் நடத்தப்பட்ட பன்னிரு திருமுறை முற்றோதல் நிறைவு வைபவத்தில் வருடம் முழுவதும் திருமுறை முற்றோதலில் பங்கு பற்றி பாராயணம் செய்தமைக்காக க.சிவபாலன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். அருகில் மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி, தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம், செயலாளர் ப.பாலசுப்ரமணியம் மற்றும் மன்ற அங்கத்தவர்கள் காணப்படுகின்றனர்.



இலங்கையில் கட்டாயக் கல்வியை நடைமுறைப்படுத்தல் மற்றும் மாணவர்களின் பாடசாலை தொடர்பான ஆர்வம், தொடர்பான ஆய்வு, தேசிய ரீதியில் யுனிசெவ் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வில் தெரிவு செய்யப்பட்ட முத்துத்தம்பி வித்தியாலயத்தில் கல்வியியல் ஆய்வாளர் பா.தனபாலன் மேற்படி ஆய்வை மேற்கொள்வதுடன் அங்குள்ள விசேட கல்வி அலகின் செயற்பாடுகளில் மாணவர் பங்குபற்றலையும் படத்தில் காணலாம்.




வலிகாமம் கல்வி வலய முறைசாரா கல்விப் பிரிவால் நடத்தப்பட்டுவரும் பெற்றோர், பிள்ளைகளுக்கான கல்வி விழிப்புணர்வு செயலமர்வு அண்மையில் சுழிபுரம் பெரியபுலோ அண்ணா சனசமூக நிலையத்தில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் உரையாற் றுவதையும், செயற்றிட்ட அலுவலர் ந.சண்முகராஜா, கிராம அலுவலர் ஆர்.ஸ்ரீரஞ்சன், ஐக்கிய சங்க வித்தியாலய அதிபர் சி.சிவகணேசசுந்தரன், சங்கானைப் பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் வி.செல்வம், சமுர்த்தி அலுவலர் அசிவானந்தன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



பருத்தித்துறை ப.நோ.கூ சங்க சவனாய் கிளைக்கு "கமநெகும" திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலை மன்றத்தலைவர் கே.பி.ஆனந்தநடேசன் தலைமையில் கிராம உத்தியோகத்தர் எஸ்.ரவீந்திரன் நாட்டி வைப்பதைப் படத்தில் காணலாம்.

# யாழ்ப்பாண கல்வி வலயத்தின் க.பொ.த (சா/த) 2008 பெறுபேறுகள்

## ஒரு பார்வை

யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தினுள் 5 கல்வி வலயங்கள் இருக்கின்றன. இவைகளுள் யாழ்ப்பாண கல்வி வலயம் வடமாகாணத்திலும் தேசிய ரீதியிலும் முக்கியமாக கருதப்படுகின்றது. இக்கல்வி வலயம் யாழ்ப்பாணம், நல்லூர் ,கோப்பாய் என மூன்று கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் , நல்லூர் கோட்டங்கள்

அட்டவணைI

| கோட்டம் | பாடசாலை எண். | தோற்றியோர் எண். | சித்திபெற்றோர் எண். | சித்தி விகிதம் |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 21 | 1323 | 612 | 61.38 |
| நல்லூர் | 20 | 1155 | 761 | 65.89 |
| கோப்பாய் | 17 | 866 | 280 | 32.33 |
| யாழ்ப்பாண வலயம் | 58 | 3344 | 1853 | 55.44 |

கல்வி நிலையிலும் பரீட்சைப் பெறுபேறுகளிலும் ஓரளவு ஒத்த பண்புகளைக் கொண்டிருக்க ,கோப்பாய்க் கோட்டம் கல்வி நிலையிலும் பரீட்சை பெறுபேறுகளிலும் குறைவாக இருப்பது கவனிக்கத்தக்கது.

இதனால் யாழ்ப்பாண வலயத்திற்குள் கோப்பாய்க் கோட்டம் இருப்பது கோப்பாய்க்கு நன்மை தராது என்றும், இக்கோட்டம் இங்கு காணப்படும் பிரச்சினைகளுக்கு ஒத்த வலிகாமம் வலயத்தில் இருப்பது சிறந்தது எனக் கருதுபவர்களும் உண்டு.இதுகுறித்து கல்வியாளர்கள் மத்தியில் வேறுபட்ட கருத்துக்கள் உண்டு.

அட்டவணை Iஇல் யாழ்ப்பாண வலயத்தில் உள்ள பாடசாலை விபரங்களும் , மாணவர் எண்ணிக்கை க.பொ.த. உ/தரம் கற்க சித்தி பெற்றோர் எண்ணிக்கை , விகிதம் ஆகியன கோட்ட மட்டத்தில் தரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண வலயத்தில் 3ஆயிரத்து 344 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி ஆயிரத்து 853 மாணவர்கள் (55.44%) தேர்ச்சிபெற்றிருக்கின்றார்கள். நல்லூர், யாழ்ப்பாணம் இரு கோட்டங்களில் இருந்து 2 ஆயிரத்து 478 மாணவர்கள் தோற்றி ஆயிரத்து 573 பேர் (63.48%) சித்தி பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது. நல்லூர்,யாழ்ப்பாணக்கோட்டங்களில் பரீட்சை பெறுபேறுகள் உயர்வாக இருப்பதற்கு பல காரணங்கள் சாதகமாக இருக்கின்றன. இவ்விரு கோட்டங்களுள் 3 தேசிய பாடசாலைகளும், பல பிரபல நகரப்பாடசாலைகளும் மற்றும் பல 1 AB பாடசாலைகள் கூடுதலாக இருக்கின்றன. இப் பாடசாலைகளில் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மீத்திறன் மாணவர்கள் பெரும் எண்ணிக்கையில் கற்பதும் மேலும் கல்விச் செயற்பாட்டிற்கு சாதகமான மத்திய வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகள் கூடுதலாகக் கற்பதும் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் பல இக் கோட்டங்களில் இடவமைவு பெற்றிருப்பதும் முக்கிய காரணங்களாகும்.

கோப்பாய்க்கோட்டம் கிராமிய, விவசாயப் பின்புலத்தை கொண்டிருப்பதுடன் சமூக -பொருளாதார நிலைமைகள் கல்விச் செயற்பாட்டிற்கு சாதகமற்றுக் காணப்படுகின்றன. சமூக பொருளாதார ரீதியில் பின்தங்கிய சமூகத்தினர் குறிப்பிடத்தக்களவு இங்கு வாழ்வதும் இவர்கள் வறுமை , கல்வி விழிப்புணர்வின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதால் தங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் கரிசனையற்றவர்களாக உள்ளனர்.

அட்டவணைII

க.பொ.த.(சா/த) பரீட்சை பெறுபேறுகள் 2007, 2008

| பாடசாலை | 2008 தோற்றியோர்எண். | 2008 உயர்தரம் கற்க தகுதி பெற்றோர் | சித்தி பெற்றோர் வீதம் | தோற்றியோர் | சித்தி பெற்றோர் | சித்தி% 2007 | வேறுபாடு 2007 2008 |
|---|---|---|---|---|---|---|---|
| கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம் | 27 | 07 | 25.93 | 32 | 11 | 34.37 | -8.44 |
| யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி | 187 | 127 | 67.91 | 192 | 134 | 69.79 | -1.88 |
| திருக்குடும்ப கன்னியர்மடம் | 112 | 75 | 66.96 | 109 | 67 | 61.46 | +5.50 |
| சன்மார்க்க மகாவித்தியாலயம் | 17 | 04 | 23.53 | 20 | 07 | 35.00 | -11.47 |
| புனித சாள்ஸ் மகா வித்தியாலயம் | 78 | 10 | 12.82 | .73 | 13 | 17.81 | -4.99 |
| புனித ஜேம்ஸ். ஆண்கள் பாடசாலை | 37 | 05 | 13.51 | 27 | 02 | 7.40 | +6.11 |
| வைத்தீஸ்வரா வித்தியாலயம் | 65 | 30 | 46.15 | 71 | 49 | 69.01 | -22.86 |
| வேம்படி உயர்தர பெண்கள் பாடசாலை | 194 | 193 | 99.48 | 219 | 219 | 100 | -0.52 |
| கொழும்புத்துறை புனித யோசெப் வித்தி. | 22 | 03 | 13.64 | 17 | 01 | 5.88 | +7.76 |
| கொழும்புத்துறை துரையப்பா வித்தி. | 07 | 03 | 42.86 | 09 | 05 | 55.55 | -12.69 |
| கொட்டடி நமசிவாயம் வித்தி. | 40 | 15 | 37.50 | 32 | - | - | +37.50 |
| நல்லூர் விக்னேஸ்வரா வித்தி. | 09 | 03 | 33.33 | 12 | 04 | 33.33 | - |
| நாவாந்துறை கத்தோலிக்க கலவன் பாட. | 39 | 11 | 28.21 | 32 | 08 | 25.00 | +3.21 |
| பாசையூர் புனித அந்தோனியார் வித்தி. | 21 | 11 | 52.38 | 27 | 10 | 37.00 | +15.38 |
| புனித ஜேம்ஸ் பெண்கள் வித்தி. | 49 | 06 | 12.24 | 46 | 13 | 28.26 | -16.02 |
| புனித மேரிஸ் வித்தியாலயம் | 39 | 12 | 30.77 | 54 | 14 | 25.92 | +4.85 |
| வண்ணை நாவலர் மகா வித்தியாலயம் | 22 | 09 | 40.91 | 16 | 08 | 50.00 | -9.09 |
| ஒஸ்மானியாக் கல்லூரி | 05 | 0 | 0.00 | 02 | - | - | - |
| சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | 106 | 88 | 83.02 | 108 | 103 | 95.37 | -12.35 |
| புனித பரியோவான் கல்லூரி | 115 | 103 | 89.57 | 124 | 108 | 87.00 | +2.57 |
| புனித பத்திரிசியார் கல்லூரி | 132 | 97 | 73.48 | 144 | 107 | 74.31 | -0.73 |
| கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலம் | 80 | 38 | 47.50 | 71 | 25 | 35.21 | +12.29 |
| யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி | 200 | 200 | 100.00 | 210 | 208 | 99.05 | +0.95 |
| யாழ்/இந்து மகளிர் கல்லூரி | 218 | 196 | 89.91 | 227 | 216 | 95.15 | -5.24 |
| கொக்குவில் இந்துக்கல்லூரி | 211 | 180 | 85.31 | 204 | 167 | 81.86 | +4.45 |
| செங்குந்தா இந்துக்கல்லூரி | 43 | 15 | 34.88 | 50 | 11 | 22.00 | +12.88 |
| முத்துத்தம்பி மகா வித்தியாலயம் | 61 | 17 | 27.87 | 33 | 16 | 48.48 | -20.61 |
| அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம் | 26 | 09 | 34.62 | 31 | 07 | 22.58 | +12.04 |
| கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தி. | 22 | 05 | 22.73 | 18 | 07 | 38.88 | -16.15 |
| கொக்குவில் ஸ்ரீ ராமகிருஷ்ண மகா வித்தி. | 15 | 10 | 66.67 | 23 | 06 | 26.08 | +40.59 |
| கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தி. | 15 | 06 | 40.00 | 18 | 04 | 22.22 | +17.78 |
| கொக்குவில் ஞானபண்டித வித்தி. | 23 | 06 | 26.09 | 21 | 06 | 28.57 | -2.48 |
| கோண்டாவில் இந்து மகா வித்தி. | 51 | 18 | 35.29 | 38 | 09 | 23.68 | +11.61 |
| கோண்டாவில் ஸ்ரீ ராமகிருஷ்ண மகா வித். | 24 | 17 | 70.83 | 20 | 12 | 60.00 | +10.83 |
| நல்லூர் இந்து தமிழ்பெண்கள் பாடசாலை | 28 | 12 | 42.86 | 18 | 09 | 50.00 | +7.14 |
| நல்லூர் ஸ்தான C.C.T.M.S | 18 | 03 | 16.67 | 25 | 09 | 36.00 | +19.33 |
| நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தி. | 06 | 03 | 50.00 | 08 | 02 | 25.00 | +25.00 |
| பெரியபுலம் மகா வித்தியாலயம் | 77 | 22 | 28.57 | 69 | 27 | 39.13 | -10.56 |
| உயரப்புலம் கலவன் பாடசாலை | 14 | 01 | 7.14 | 15 | 02 | 13.73 | -6.55 |
| கோண்டாவில் பரஞ்சோதி வித்தி. | 11 | 03 | 27.27 | 20 | 05 | 25.00 | +2.27 |
| இளையதம்பி இந்து மகா வித்தி. | 12 | 01 | 8.33 | 12 | 03 | 25.00 | -16.67 |
| அச்சுவேலி மத்திய கல்லூரி | 90 | 25 | 27.78 | 72 | 22 | 30.55 | -2.77 |
| அத்தியார் இந்துக் கல்லூரி | 83 | 29 | 34.94 | 80 | 32 | 40.00 | -5.06 |
| இடைக்காடு மகா வித்தி. | 27 | 10 | 37.04 | 31 | 15 | 38.38 | -1.34 |
| கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி | 116 | 47 | 40.52 | 98 | 35 | 35.71 | +4.81 |
| கோப்பாய் மகா வித்தியாலயம் | 22 | 07 | 31.82 | 17 | 01 | 5.88 | +25.94 |
| ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி | 131 | 44 | 33.59 | 112 | 37 | 31.62 | +1.97 |
| உரும்பிராய் இந்துக் கல்லூரி | 64 | 06 | 9.38 | 69 | 05 | 7.25 | +2.13 |
| அச்செழு சைவப்பிரகாச வித்தி. | 43 | 08 | 18.60 | 44 | 14 | 31.82 | -13.22 |
| அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம் | 14 | 04 | 28.57 | 16 | 07 | 43.75 | -15.18 |
| புனித திரேசா பெண்கள் கல்லூரி | 33 | 16 | 48.48 | 36 | 19 | 52.78 | -4.30 |
| ஆவரங்கால் மகாஜனா வித்தி. | 13 | 01 | 7.69 | 18 | 06 | 33.33 | +25.64 |
| ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி. | 59 | 40 | 67.80 | 61 | 29 | 47.54 | +20.26 |
| கோப்பாய் சரவணபவானந்த வித்தி. | 24 | 11 | 45.83 | 11 | 07 | 63.63 | -17.60 |
| புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தி | 16 | 02 | 12.50 | 20 | 04 | 20.00 | -7.25 |
| ஊரெழு கணேசா வித்தி. | 44 | 10 | 22.73 | 36 | 02 | 5.55 | +17.16 |
| உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி. | 65 | 10 | 15.38 | 60 | 08 | 13.33 | -2.05 |
| வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தி. | 22 | 10 | 45.45 | 16 | 12 | 75.00 | -29.55 |

இக் கோட்டத்தின் மீத்திறன் ,மத்திய வகுப்பு மாணவர்கள் யாழ்ப்பாணம்,நல்லூர் கோட்டங்களில் கற்பதால் கோட்டப் பாடசாலைகள் சிறப்பாக இயங்க மத்திய வகுப்பினரின் உந்துதல் இல்லாமையும் கல்விச்செயற்பாட்டிற்கு சாதகம் இல்லாத நிலைமைகளாகக் காணப்படுகின்றன.

அட்டவணை II இல் பாடசாலை ரீதியில் தோற்றிய மாணவர்கள் எண்ணிக்கை, சித்தி பெற்றோர் எண்ணிக்கை, சித்தி விகிதம் தரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் இருந்து 200 மாணவர்கள் பரீட்சைக்குத்தோற்றி 200 மாணவர்களும் சித்தி பெற்றிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது.

வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் இருந்து 194 பேர் பரீட்சைக்குத் தோற்றி 193 பேர் சித்தி பெற்றுள்ளனர். சித்தி விகிதம் 99.48% ஒரு மாணவி கணிதத்தில் சித்தி பெறத் தவறிய விடத்தும் பாடசாலையில் பெறுபேறுகள் மிக உயர்வாகவும் கடந்த வருடத்திலும் பார்க்க சிறப்பாக இருக்கின்றன. மேற்குறிப்பிட்ட இரண்டு தேசிய பாடசாலைகளுக்கு அடுத்து இந்து மகளிர் கல்லூரி 89.91%, புனித பரியோவான் கல்லூரி 89.57%, கொக்குவில் இந்துக்கல்லூரி 85.31%,சுண்டுக்குளிர் மகளிர் கல்லூரி 83.02%, ஆகிய 80%த்திற்கு மேற்பட்ட பெறுபேறுகளைப் பெற்றுள்ளன. இப் பாடசாலைகள் கூடுதலான மாணவர்களை பரீட்சைக்கு அனுப்பி உயர்வான பெறுபேறுகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.


பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
PhD.Durham
முன்னாள் துணைவேந்தர்

புனித பத்திரிசியார் கல்லூரி 73.48%, கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம் 70.83% ஆகியன 70 வீதத்திற்கு மேற்பட்ட பெறுபேற்றையும் யாழ்ப்பாண மத்திய கல்லூரி 67.91% வீதம், திருக்குடும்ப கன்னியர்மடம் 66.96%, ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாலயம் 66.67%, பாசையூர் புனித அந்தோனியார் வித்தியாலயம் 52.38%,நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம் 50% சித்தியைப் பெற்றுள்ளன. ஏனைய பாடசாலைகளின் சித்தி விகிதம் 50க்கும் குறைவாகவுள்ளன.

ஆவரங்கால் மகாஜனாக்கல்லூரி வித்தியாலயம் 7.69% உரும்பிராய் இந்துக் கல்லூரி 9.38% இரண்டுபாடசாலைகளின் பெறுபேறுகள் 10 வீதத்திற்கு குறைவாக இருக்கின்றன. உரும்பிராய் இந்துக்கல்லூரியில் இருந்து 64 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 6பேர் மாத்திரம் சித்தி பெற்றிருப்பது மிகவும் கவலை தருவதாக இருக்கின்றது. நீண்ட கல்வி வரலாற்றையும் பல சாதனைகளையும் பெற்ற ஒரு பெரிய கல்வி நிறுவனத்தின் பெறுபேறுகள் தொடர்ந்தும் குறைவாக இருந்து வரும் நிலைமையை மாற்ற துரிதமாக புதிய கற்பித்தல்,கற்றல் முறைகளைக் கையாண்டு கல்வியை முன்னேற்றவும் பரீட்சைகளில் நல்ல அடைவுகளைப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ் வலயத்தின் 2008 ,2007ஆம் ஆண்டுகளுக்குரிய க.பொ.த. சாதாரண பரீட்சை பெறுபேறுகள் பாடசாலைகள் அடிப்படையில் அட்டவணை II இல் தரப்பட்டுள்ளன. பாடசாலைகள் எண்ணிக்கையில் மாற்றம் இருக்கவில்லை. 58 பாடசாலைகளில் 2 பாடசாலைகளில் பரீட்சைப்பெறுபேறுகளில் எந்த மாற்றமும் இல்லை.

2008 இல் 28 பாடசாலை களில் பெறுபேறு 2007இலும் பார்க்க உயர்வாகவும் மற்றும் 28 பாடசாலைகளின் பெறுபேறுகள் மிகச் சிறு அளவில் இருந்து பெரிய அளவில் குறைந்து காணப்படுகின்றன.

இக்காலத்தில் மிகச் சிறந்த அதிகரிப்பை கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம் பெற்றுள்ளது. 2007இல் பாடசாலையில் இருந்து ஒரு மாணவனும் க.பொ.த. உயர்தரம் கற்கத் தகுதி பெறவில்லை. ஆனால் இம்முறை 40 மாணவர்கள் பரீட்சை எழுதி 15 பேர் க.பொ.த உயர் தரம் கற்கத் தகுதி பெற்றிருப்பது மிகவும் பாராட்டுக் குரியதும் மகிழ்ச்சிக்குரியதுமாகும். இதேபோல் கோப்பாய் மகாவித்தியாலயம் 31.82 %, கொக்குவில் ஸ்ரீ ராமகிருஷ்ணா 66.67%, ஆவரங்கால் நடரசா இராமலிங்கம் 67.80% மற்றும் பாசையூர் அந்தோனியார் வித்தியாலயம் 52.38% பெற்று இவ் இடைக்காலத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

தீய மனிதர்கள் பயத்திற்கு கீழ்ப் படிகிறார்கள்.
நல்ல மனிதர்கள் அன்புக்குக் கீழ்ப் படிகிறார்கள்.
–அரிஸ்டாட்டில்

வலம்புரி

## கலாசாரத்தைப் பேணும் காத்திரமான நடவடிக்கைகள் முகிழ்ப்படைய வேண்டும்

யாழ்ப்பாணத்தின் தற்போதைய கலாசாரப் பண்பாட்டு கோலங்களை நினைத்தால் வேதனையே மிஞ்சும்.

அந்தளவுக்கு கலாசாரப் பிறழ்வுகள் நடந்தேறுகின்றன. எனினும் யாழ்ப்பாணத்தின் இறுக்கமான கலாசாரப் பாரம்பரியத்தின் விளைவாக தற்போது இடம்பெறும் பிறழ்வுகள் வெளிவராமல் தடுக்கப்படுகின்றன அல்லது மூடி மறைக்கப்படுகின்றன என்று கூறிக் கொள்ளலாம்.

இருந்தும் நீண்ட காலத்திற்கு இந்த மறைப்பும்,மறுப்பும் நீடிக்க முடியாதென்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

என்றோ ஒருநாள் விடயம் விஸ்வரூபம் எடுக்கும் போது அது எல்லைகடந்து போக வீதிகளில் பெண் பிள்ளைகள் நடமாட முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

கூடவே இளைஞர் குழுக்கள் வாள், கத்திகள் சகிதம் சண்டப்பிரசண்டம் நடத்துவதும், வீடுகளுக்குள் அத்துமீறிப் புகுந்து அடாவடித்தனம் செய்வதும் நடந்தேறக் கூடியவை.

இவற்றின் காரணமாகப் பெண் பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுவதுடன் பாடசாலைகளில் பெண் பிள்ளைகள் இடைவிலகல் என்ற பிரச்சினை எழுவதும் தவிர்க்க முடியாததாகி விடும்.

இளைஞர்கள் தத்தம் குழுக்களுக்கு பெயர் சூட்டிக் கொண்டு சேட்டைகள், சண்டித்தனங்கள், கொள்ளைகள், களவுகள் எனப் பல்வேறு கலாசாரப் பிறழ்வுகளில் ஈடுபடுவர்.

இவற்றையெல்லாம் நாம் கூறும்போது வியாழ வக்கிரத்திற்கு பலன் கூறுவது போல சிலர் எண்ணலாம். ஆனால் இவை அனுபவத்தின் நிஜங்கள்.

கலாசாரப் பிறழ்வுகளில் ஈடுபடும் இளைஞர்களே! உங்கள் அட்டகாசத்தை நிறுத்துங்கள் எனக் கேட்காமல் இருப்பதற்கான அபாயச் சங்கொலி இது.

இதன் யதார்த்த நிலையைப் புரிந்து கொண்டு பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள் இணைந்து தத்தம் பிரதேசத்திற்குட்பட்ட இளைஞர்களை வழிப்படுத்த –ஆற்றுப்படுத்த முன்வர வேண்டும்.

இதனைப் பல்பரிமாணங்களில் முன்னெடுப்பது கட்டாயமானதாகும்.

அவ்வகையில் பாடசாலைகளில் கல்வியை நிறைவு செய்யாத–உயர்கல்வியைத் தொடர முடியாத இளைஞர்களுக்கு கணனிக் கல்வி, ஆங்கில அறிவு மற்றும் இயல், இசை, நாடகம் என்பவற்றினூடாக இளைஞர்களிடையே மறைந்திருக்கும் திறனை வெளிப்படுத்தும் சந்தர்ப்பத்தை உருவாக்குவதும் அதன் மூலம் அவர்கள் தம் மீதும் தம் குடும்பம், அயல், சமூகம் என்பவற்றின் மீதும் பற்றும் விசுவாசமும் கொள்வதற்கான வாய்ப்பை உருவாக்க வேண்டும்.

இந்தப் பணியில் பிரதேச செயலகங்களின் கலாசாரப் பேரவைகள் காத்திரமான பணியை ஆற்ற முடியும்.

# ஐ.நா.மனிதாபிமான குழுவை பாதுகாப்பு வலயத்தினுள் அனுமதிப்பது சாத்தியமற்றது

## அரசாங்கம் அறிவிப்பு: பாதுகாப்பு விவகாரமே பிரச்சினையாக உள்ளதாகவும் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் மனிதாபிமானக் குழுவை பாதுகாப்பு வலயத்துக்கு அனுப்புவது தொடர்பில் பாதுகாப்பு விவகாரமே பிரச்சினையாகவுள்ளது.ஐ.நாவின் மனிதாபிமானக் குழுவை பாதுகாப்பு வலயத்துக்கு அனுப்புவது உபாய ரீதியாக நடைமுறைச் சாத்தியமற்றதாகும் என்று இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

பாதுகாப்பு வலயத்துக்கு ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமானக் குழுவை அனுப்ப வேண்டும் என ஐ. நா. உட்பட சர்வதேச அமைப்புகள் கோரி வருகின்றமை குறித்து வினவிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



இவ்விடயம் தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது,

பாதுகாப்பு வலயத்துக்கு ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமானக் குழுவை அனுப்ப வேண்டும் என்பது ஐ.நாவின் கோரிக்கையும் யோசனையுமாகவுள்ளது.எனவே அரசாங்கம் அதனை கொள் கையளவில் ஏற்றுக் கொள்ளும் நிலைப்பாட்டில் இருந்தாலும் அது உபாய ரீதியாக நடைமுறைக்குச் சாத்தியமற்றதாகும்.

எனவே ஐ.நாவின்மனிதாபிமானக் குழுவை அங்கு அனுப்புவது சாத்தியமற்றது என்ற பதிலையே எம்மால் வழங்க முடியுமாகவுள்ளது. காரணம் பாதுகாப்பு என்ற விடயம் இங்கு மிகவும் முக்கியமானது. அதனை அலட்சியம் செய்ய முடியாது.

ஊடகவியலாளர்கள்பாது காப்பு வலயத்துக்குச்சென்று அங்கு ஏதாவது ஆபத்தை எதிர் கொண்டால் அந்த விடயம் புலிகளின் பிரசாரத்துக்கு பிராணவாயு ஏற்றுவதாக அமையும் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

பாதுகாப்பு வலயத்தில் ஊடகவியலாளர்களுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் ஊடகங்களில் தலைப்புச் செய்தியாக வந்து விடும் . அதற்கு அரசாங்கம் தான் பதில் சொல்லியாக வேண்டும்.இந்த நிலையில் ஊடகவியலாளர்களை அங்கு அனுப்புவது முடியாத விடயம் என்று அரசாங்கம் கருதுகின்றது என்றார். (ஓ-6)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு அவுஸ்திரேலியா 10மி.டொலர் உதவி

(கொழும்பு)

வடக்கில் மோதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவும் வகையில் அவுஸ்திரேலியா 10 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது.

அவுஸ்திரேலிய வெளி விவகார அமைச்சர் ஸ்டீபன் ஸ்மித் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில்,

ஐ. நா முகவர்கள் ஊடாக இந்த நிதி வழங்கப்படும் என்று தெரிவித்தார். நீர், சுகாதார , இருப்பிடம், உணவுமற்றும் ஆரோக்கிய செயற்பாடுகளுக்கு இந் நிதி பயன்படுத்தப்படும் எனஅவர் கூறினார்.

இதே வேளை கடந்த டிசம்பர் தொடக்கம் அவுஸ்திரே லிய அரசு இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கென 23.5 மில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## செயற்குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கலை கலாசாரப் பேரவையின் செயற்குழுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப2மணிக்கு யாழ். மாட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து உறுப்பினர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

## மொபிற்றல் தொலைபேசி பாவனையாளர்களுக்கு...

(யாழ்ப்பாணம்)

மொபிற்றல் கையடக்கத் தொலைபேசி சிம் அட்டைகளை மீள உறுதிப்படுத்தும் நிகழ்வு நாளை 11 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி சனிக்கிழமை வரை கே.கே.எஸ் வீதியில்அமைந்துள்ள ப.நோ.கூ.சங்க கட்டிடத்தில் இயங்கவுள்ள தற்காலிக காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மொபிற்றல் சிம் அட்டைகளை மீள உறுதிப்படுத்தும் உரிமையாளர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை, அதன் போட்டோ பிரதியையும் எடுத்து வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மொபிற்றல் சிம் அட்டைகளை உறுதிப்படுத்தும் பாவனையாளர்களுக்கு சீட்டிழுப்பு நடத்தி வெளிநாட்டு சுற்றுலா வாய்ப்புகளை ஏற்படுத்துவதுடன் அரசாங்க ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கு 1000 ரூபா வரை உபகார இணைப்புகள் வழங்கப்பட உள்ளதாக மொபிற்றல் P.L.C வடபிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ-4)

## நாட்டுக்கூத்து பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)


யாழ்.பிரதேச செயலக கலாசார பேரவை யினால் இஞைர்களுக்கான நாடக நாட்டுக் கூத்து பயிற்சி பட்டறை ஒன்று பிரதேச ரீதி யாக நடாத்தப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக நாவாந்துறை பிர தேசத்தில் உள்ள இளைஞர்களுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்கு பயிற்சிகள் நடைபெறவிருப்பதாக பேரவையின் செயலா ளர் தெரிவித்துள்ளார். (ஓ-30)

# இணைந்த கிளைகள்

சுற்றத்தாரோடு மனம் கலந்து பழகும் தன்மை இல்லாதவனுடைய வாழ்க்கை கரையில்லாத குளப்பரப்பைப் போன்றது.

குளத்துக்கு கரை முக்கியம், அப்போதுதான் அக்குளத்தில் தண்ணீர் நிறையும், மற்றவர்களுக்கும் பாதுகாப்பாக இருக்கும். கரை இல்லாவிட்டால் தண்ணீர் வழிந்தோடும், பிறர்க்கும் ஆபத்து உண்டாகும்.



அதுபோல், ஒருவன் எத்துணை நல்ல காரியம் செய்தாலும், அவன் தானாகச் செய்யாமல், தன்னோடு இருப்பவருடன் சேர்ந்து செய்கின்ற போது, அச்செயல் பலருக்கு நிலைத்த பலனைத் தரும். இல்லையென்றால்

## பரமபிதா காட்டிய பாதை

எதிரிகள் அச்செயலை பலனில்லாமல் செய்து விடுவார்கள்.

இன்று அனைத்து வளர்ச்சிக்கும் ஒற்றுமையும் சார்பும் தேவை. இந்த உலகிலே ஒவ்வொன்றும் இன்னொன்றை சார்ந்திருக்கின்றன.

மழை மேகத்தைச் சார்ந்திருக்கின்றது.
நீர் நிலத்தைச் சார்ந்திருக்கின்றது.
மலர் ஒளியைச் சார்ந்திருக்கின்றது.
நிலவு வானத்தைச் சார்ந்திருக்கின்றது.
கொடி கொம்பைச் சார்ந்திருக்கின்றது.

இதில் ஒன்று இன்னொன்றைச் சார்ந்து நிற்கத் தேவையில்லை என்றால் கொரிந்தியர்க்கு எழுதிய முதல் திருமுகத்தில் சொல்கிறார், “உடல் ஒன்று உறுப்புகள் பல...” எனவே தான் பல உறுப்புக்களை உடையதாய் இருந்தாலும் உடல் ஒன்றே இதே கருத்து தான் இன்றைய நற்செய்தி வாசகத்தின் மையக்கருத்தாக இருக்கின்றது.

இயேசு கூறுகின்றார், “நானே திராட்சைச் செடி. நீங்கள் அதன் கிளைகள். ஒருவர் என்னுடன் நான் அவருடனும் இணைந்திருந்தால் மிகுந்த கனி தருவார்”

எனவே, இன்று நாம் இயேசுவோடு இணைந்த கிளைகளாகச் செயற்பட வேண்டும். அதுவும் உயிர்த்த ஆண்டவரோடு இணைந்து செயற்பட வேண்டும். அப்படிச் செயற் படும் போதுதான் மிகுந்த பலன் கிடைக்கும், உயிர்ப் பின் பலன் கிடைக்கும்.

உயிர்த்த ஆண்டவரோடு நம்மை இணைப்பது விசுவாசம். அந்த விசுவாசம் அறுத்துவிட்டால் நாம் கிறிஸ்துவிடமிருந்து அந்நியப்பட்டுவிட்டோம். இனி ஆபத்துக்கள் நம்மைச் சூழ்ந்து கொள்ளும்.

இன்று இறைவனிடமிருந்து நம்மை பிரிக்கும் சக்திகளை இனம் கண்டு அவைகளை அழிக்க வேண்டும். அது சாதியாக இருக்கலாம்; மொழியாக இருக்கலாம்; இனவெறியாக இருக்கலாம்; ஆணவமாக இருக்கலாம்; பதவியாக இருக்கலாம். இவைகளை இனங்கண்டு அழித்துவிட்டால், நம்மை இயேசுவிடமிருந்து யாரும் பிரிக்க முடியாது.

ஜோன் ரொபேர்ட்

# யாழ்ப்பாண கல்வி வலயத்தின்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

2007/2008 இடைப்பட்ட காலத்தில் பரீட்சைப்பெறுபேறுகள் குறைந்த பாடசாலைகள் வைத்தீஸ்வரா வித்தியாலயம் 22.86 %, முத்துத்தம்பி வித்தியாலயம் 20.61%,சுண்டுக்குளிர் மகளிர் கல்லூரி 12.69% ,புனித ஜேம்ஸ் பெண்கள் வித்தியாலயம் 16.02% , கோண்டாவில் இந்து மகா வித்தி 6.1 வீதம் ஆகிய பாடசாலைகள் குறிப்பிடத்தக்கனவாகும். யாழ்ப்பாண வலயத்தில் 2008 பரீட்சையில் பாட ரீதியான பெறுபேறுகள் அட்டவணை III இல் தரப்பட்டுள்ளன. இதில் வடிவமைப்பும், தொழில் நுட்பப்பாடத்தில் 19 பேர் தோற்றி 100% சித்தி பெற்றுள்ளனர்.

அட்டவணைIII

| பாடங்கள் | தோற்றியோர் | A | B | C | S | W | சித்தி | வீதம்% |
|---|---|---|---|---|---|---|---|---|
| சைவசமயம் | 2675 | 1623 | 331 | 360 | 240 | 121 | 2554 | 95.48% |
| உரோ. கத்தோலிக்கம் | 565 | 256 | 118 | 139 | 43 | 09 | 556 | 98.41% |
| கிறிஸ்தவம் | 125 | 51 | 25 | 37 | 10 | 02 | 123 | 98.40% |
| இஸ்லாம் | 05 | - | - | 01 | 01 | 03 | 02 | 40.00% |
| தமிழ் | 3369 | 434 | 588 | 853 | 761 | 733 | 2636 | 78.24% |
| ஆங்கிலம் | 3368 | 179 | 121 | 233 | 474 | 2361 | 1007 | 29.90% |
| விஞ்ஞானமும் தொ.நு | 3370 | 267 | 273 | 477 | 767 | 1586 | 1784 | 52.94% |
| கணிதம் | 3303 | 601 | 320 | 450 | 653 | 1279 | 2024 | 61.28% |
| வரலாறு | 3353 | 587 | 365 | 662 | 802 | 937 | 2416 | 72.50% |
| *பாடத் தொகுப்பு* I | | | | | | | | |
| புவியியல் | 1331 | 54 | 91 | 302 | 405 | 479 | 852 | 64.00% |
| குடியுரிமைக்கல்வி | 623 | 74 | 62 | 121 | 183 | 183 | 440 | 70.63% |
| முயற்சியாண்மை | 396 | 06 | 42 | 85 | 138 | 125 | 271 | 68.43% |
| வர்த்தகம் | 984 | 140 | 199 | 263 | 231 | 151 | 833 | 84.65% |
| *பாடத் தொகுப்பு* II | | | | | | | | |
| சித்திரம் | 867 | 36 | 48 | 186 | 454 | 143 | 724 | 83.51% |
| சங்கீதம் (கர்நாடகம்) | 875 | 56 | 112 | 226 | 312 | 169 | 706 | 80.69% |
| நடனம் (பரதநாட்டியம்) | 249 | 49 | 55 | 70 | 60 | 15 | 234 | 93.98% |
| நாடகமும் அரங்கியலும் | 383 | 25 | 103 | 130 | 118 | 07 | 376 | 98.17% |
| தமிழ் இலக்கியம் | 843 | 349 | 150 | 173 | 101 | 70 | 773 | 91.70% |
| ஆங்கில இலக்கியம் | 171 | 11 | 21 | 72 | 52 | 15 | 156 | 91.23% |
| *பாடத் தொகுப்பு* III | | | | | | | | |
| தகவல் தொழில்நுட்பம் | 569 | 99 | 151 | 186 | 101 | 32 | 537 | 94.38% |
| விவசாயம் | 762 | 48 | 56 | 176 | 245 | 237 | 525 | 68.90% |
| மீன்பிடி | 100 | 05 | 10 | 33 | 20 | 32 | 68 | 68.00% |
| சுகாதாரம்/உடற்கல்வி | 1413 | 411 | 275 | 351 | 257 | 119 | 1294 | 91.58% |
| மனை விஞ்ஞானம் | 504 | 03 | 16 | 79 | 220 | 186 | 318 | 63.10% |
| வடிவமைப்பும் தொ.நு. | 19 | 01 | 04 | 06 | 08 | 00 | 19 | 100% |

நாடகமும் அரங்கியல் பாடத்தில் 98.17% சித்தி பெறப்பட்டுள்ளது. சமய பாடங்கள் 4இன் சாராசரி சித்தி விகிதம் 96.00% ஆக இருக் கின்றது. நடனம், தமிழ் இலக்கியம் 91.70% மாக ஆங்கில இலக்கியம் 91.23% சுகாதாரமும் உடற்கல்வியும் 91.58% தகவல் தொடர் தொழில்நுட்பமும் 94.38% ஆகிய பாடங்களில் பெறுபேறுகள் 90 வீதத்திற்கு மேல் இருக்கின்றன. விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் பாடத்தில் சித்தி பெறுபேறு 52.94%மாக , ஆங்கிலத்தில் 29.90% ஆக இருப்பது கவலை தருகின்றது.இம்முறை கணிதப் பெறுபேறு சற்று உயர்வடைந்துள்ளது மகிழ்ச்சியைத் தருகின்றது.

அட்டவணை IVஇல் தர அடிப்படையில் பாடப்பெறுபேறுகள் காட்டப்பட்டுள்ளன. பரீட்சைப் பெறுபேறுகள் சாதாரண பரம்பல் வளையி பண்பினை காட்டி நின்றாலும் சித்தி விகிதம் குறைவான பக்கம் கூடுதலாக இருப்பதைக் காணமுடிகின்றது. பல பரீட்சைகளின் பரீட்சை பெறுபேறுகளை ஆராய்ந்த பொழுது B சித்தி Aயிலும் Cயிலும் பார்க்க குறைவாக இருப்பதை கர்ண முடிகின்றது. மிக உயர்வான B சித்தியை A தரத்திற்கு உயர்த்தும் பண்பு பரீட்சகர் களால் பொதுவில் கடைப்பிடிக்கப்படுவதுண்டு. B குறைவாக இருப்பதற்கு இது ஒரு காரணமாக அமையலாம்.

இவ்வலயத்தில் மூவாயிரத்து 344 பரீட்சார்த்திகள் மொத்தமாக 30ஆயிரத்து 222 பாட அலகுகளுக்குத்தோற்றி 21 ஆயிரத்து 228 பாட அலகுகளில் சித்தி பெற்றிருக்கிறார்கள். சித்தி விகிதம் 70.24 வீதமாகும். தொகுத்து நோக்குகையில் யாழ்ப்பாண வலய க.பொ.த. சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகள் திருப்தி தருவதாக இருக்கின்றன. இவ் வலயத்தில் ஆங்கிலமொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றிய சகல மாணவர்களும் க.பொ.த. உயர் தரம் கற்க தகுதி பெற்றிருப்பதும் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருப்பதும் மிகவும் பாராட்டுக்குரியது. ஆங்கில மொழி மூல வகுப்புகள் தொடங்குவதில் பல பிரச்சினைகளை எதிர் நோக்கியபொழுதும் இது வெற் றிகரமாக அமைந்ததால் க.பொ.த. உயர்தரத்தில் ஆங்கில மொழி மூலம் முன்னெடுப்பதில் புதிய நம்பிக்கை பிறந்துள்ளது. இம்முறை கணித பாடத்தில் சித்தி விகிதம் அதிகரித்த பொழுதும் விஞ்ஞான பாடத்தில் சித்தி விகிதம் குறைவாக இருக்கின்றமை விஞ்ஞான கல்வி வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கும் ஏற்கனவே க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞான கல்வியில் மாணவர் எண்ணிக்கை குறைவடைந்து வருவது பல பிரச்சினைகளை உரு வாக்கியுள்ளன. ஆகவே விஞ்ஞான கல்வி வளர்ச்சியை முன்னெடுக்க புதிய நடவடிக்கைகள் தேவை.

அட்டவணை IV

| தரம் | எண். | விகிதம் |
|---|---|---|
| A | 5365 | 17.75 |
| B | 3336 | 11.70 |
| C | 5671 | 18.77 |
| S | 6656 | 22.02 |
| W | 8994 | 29.76 |
| | 30222 | 100 |

இவ் வலயத்தில் பல பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரப்பெறுபேறுகள் குறைவ்டைந்துள்ளமை கவனத்தில் எடுக்கப்பட்டு வரும் ஆண்டுகளில் சித்தி விகிதம் உயர்வடைய பெருத்தமான கல்வி செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு பாடசாலையினதும் கல்விப் பெறுபேறுகள் பற்றி பாடசாலைச் சமூகமும், கல்விச் சமூகமும் ஆக்கபூர்வமாக அலசி ஆராய்ந்து காணப்படும் குறைகளை இனம் கண்டு நீக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் பொழுதுதான் பின்னர் நல்ல பெறுபேறுகளைப் பெற முடியும்.

## பிரித்தானியாவில் 8ஆவது நாளாக தொடரும் மாணவர்களின் உண்ணாநிலைப் போராட்டம்

வன்னியில் அல்லலுறும் மக்களைக் காப்பாற்றக்கோரி பிரித்தானியாவில் கடந்த 33 நாட்களாக மாணவர்களும் மக்களும் நடுவீதியில் நின்று போராட்டங்களில் ஈடுபட்டிருக்கின்றனர். அத்துடன் 8ஆவது நாளாக பல்கலைக் கழக மாணவர்கள் உண்ணாநிலைப் போராட்டத்தை மேற் கொள்கின்றனர்.

நேற்றும் வழமைபோல் தமிழ் மக்களும் 20 வரையிலான பிரித்தானிய சமத்துவ கட்சியின் இளையோர் செயற்பாட்பாளர்களும் தங்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கெண்டனர். உண்ணாநிலை மேற்கொள்ளும் மாணவர்களின் உடல்நிலை மிகவும் தளர்ந்ததை கேள்வியுற்ற தாய்மார் தங்கள் பிள்ளைகளுடன் வரிசையில் நின்று மாணவர்களை பார்வையிட்டு செல்கின்றனர்.

பல்க்ல்லைக்கழக மாணவர்கள் தங்கள் பாட நேரங்கள் தவிர்ந்த நேரங்களில் நாடாளுமன்ற சதுக்கத்தில் தங்கள் ஆதரவை மக்களுக்கு வழங்கிய வண்ணம் உள்ளனர். (ஓ-6)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 ❖ 02 ❖ 1931



மறைவு 08 ❖ 05 ❖ 2008

அமரர் உயர்திரு சின்னத்தம்பி நாகராஜா

(சிரேஷ்ட சட்டத்தரணியும், முன்னாள் யாழ். மாநகர முதல்வரும்)

எம் குடும்பத்தைப் பாசமுடன் வளம்பெற வைத்த எம் தலைவனே
எம்மை பார்போற்றும் பல கலைகள் கற்க வைத்த அருமை அப்பாவே
உற்றாரும் ஊராரும் போற்ற வாழ்ந்த உத்தமரே
அன்பைச் சொரிந்து, அறிவை ஊட்டி எம்மை அன்பாக வளர்த்த
அன்புத் தெய்வமாக எங்கள் மனங்களில் என்றும் குடிகொண்டிருக்கும்
எங்கள் குடும்பத் தலைவரின் நினைவுகளையும், கனவுகளையும்
சுமந்து கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(2711)


## பாகிஸ்தானிலுள்ள போராளிகளை களைய இராணுவத்துக்கு பிரதமர் உத்தரவு

பாகிஸ்தான் பிரதமர் யுஸுப் ராஸா கிலானி அந் நாட்டில் உள்ள போராளிகளையும் பயங்கரவாதிகளையும் அடியோடு களைய இராணுவத்தினருக்கு உத்தரவிட்டுள்ளார். நாட்டுமக்களுக்கு தொலைக்காட்சி மூலம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



பாகிஸ்தானின் சுவாட் பள்ளத்தாக்கு பிராந்தியத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள்

வடமேற்கு பாகிஸ்தானின் சுவாட் பள்ளத்தாக்கிலும் ஏனைய பகுதிகளிலும் அண்மை நாட்களாகப் படையினருக்கும் போராளிகளுக்குமிடையே இடம்பெற்ற மோதல்களில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் அவ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.



பிரதமர்

நாட்டின் சமாதானம் மற்றும் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்க முயலும் போராளிகளின் முயற்சிகளை தோற்கடிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக கிலானி தெரிவித்தார்.

"எமது முழு நாட்டையும் பணயக் கைதியாகப் பிடித்து வைக்கவும் எமது எதிர்காலத்தை துப்பாக்கி முனையில் இருட்டடிக்கவும் விரும்புபவர்களுக்கு எதிராக அரசாங்கம் மற்றும் ஆயுதப் படையினருடன் முழுத் தேசமும் இணைந்து செயற்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது" என கிலானி கூறினார்.

மேலும் மோதல்களின் போது இடம்பெயர்ந்தவர்களை பராமரிப்பதற்காக சர்வதேச சமூகத்தின் உதவியை அவர் கோரினார்.

சுவாட் பள்ளத்தாக்கில் மோதல்கள் நடைபெறும் பகுதியில் சிக்கியுள்ள மக்களை வெளியேற அனுமதிக்கும் வகையில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ளது. (ஓ-6)


## கேள்வி அறிவித்தல்

யாழ்.போதனா வைத்தியசாலையின் பாதுகாப்புச் சேவைக்கு தனியார் பாதுகாப்புச் சேவை நிறுவனங்களிடமிருந்து 01.07.2009 ஆம் திகதியிலிருந்து 31.06.2010 ஆம் திகதி வரைக்குமான பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவத்தையும் நிபந்தனைகளையும் 1000/= ஒப்பந்த வைப்புப் பணம் செலுத்தி, 22.05.2009 ஆம் திகதிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்வி விண்ணப்பங்களை 29.05.2009 காலை 10 மணிக்கு முன்னர் இவ் வைத்தியசாலையின் ஒப்பந்தப் பெட்டியிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்க முடியும். அத்திகதிக்கு பின்னர் வரும் விண்ணப்பங்களும் தகுதியற்ற விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

Dr.E.தேவநேசன்
தலைவர்,
கேள்விச்சபை,
யாழ்.போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(C/2554)



வன்னியில் பாதுகாப்பு வலயப் பகுதி 2 1/2 சதுர கிலோ மீற்றராக குறைக்கப்பட்ட நிலையில், மக்கள் இடம் பெயர்ந்து பாதுகாப்புத் தேடுவதை படங்களில் காணலாம்.

## ஹைடன்-பத்ரிநாத் ஜோடியின் அதிரடியில்

# சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு தொடர்ச்சியாக ஐந்தாவது வெற்றி

(கிம்பேர்லி)

ஹைடன்-பத்ரிநாத் ஜோடியின் அதிரடியான இணைப் பாட்டத்தின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை இலகுவாக வீழ்த்தியது.

இதன் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் 'அணி கடைசியாக விளையாடிய 5 போட்டிகளில் தொடர்ச்சியாக வெற்றிபெற்றது.

ஐ.பி.எல். தொடரில் நேற்று கிம்பேர்லியில் நடைபெற்ற லீக் சுற்றின் 37ஆவது போட்டியில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் ஷேன் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதின.


இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சியளித்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் நாமன் ஓஜா ஓட்டமெதனையும் எடுக்காமல் ஆட்டமிழக்க ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 0.3 ஓவர்களில் ஒரு ஓட்டத்தை மாத்திரம் எடுத்து ஒரு விக்கெட்டை இழந்தது.

எனினும் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த சிமித்-அஷ்னோக்கர் ஜோடியின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி சரிவிலிருந்து மீண்டது.

இந்த ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக 53 ஓட்டங்களை எடுத்த போது அஷ் னோக்கர் 25 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங் கலாக) 26 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டம் இழந்தார்.

தொடர்ந்து ஜடேஜா களமிறங்க மறுமுனையில் கிரேம் சிமித் 33 பந்துகளில் (2 பவுண்டரிகள் அடங்கலாக) 30 ஓட்டங்களை எடுத்து



ஆட்டம் இழக்க ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 12.2 ஓவர்களில் 75 ஓட்டங்களை எடுத்து 3ஆவது விக்கெட்டை இழந்தது.

அடுத்து யூசுப்பதான் களம் இறங்க மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய ஜடேஜா 19 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 27 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார்.

தொடர்ந்து யூசுப்பதான் 07, ஹார் செல்டைன் 09, றயூட் 07 ஓட்டங்களுடன் அடுத்தடுத்து ஆட்டம் இழக்க ராஜஸ்தான் றேயல்ஸ் அணி 17.2 ஓவர்களில் 111 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 07 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

எனினும் 8ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ஷேன்வோர்ன்-ஹார்வூட் ஜோடி ஓரளவு பிரகாசிக்க ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் ஷேன் வோர்ன் 11 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 21 ஓட்டங்களையும் ஹார்வூட் 7 ஓட்டங்களையும் ஆட்டம் இழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் முரளிதரன், ஜகதி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் அல்பி மோர்கல், பாலாஜி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 141 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு முரளிவிஜய்-ஹைடன் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது.

எனினும் முரளிவிஜய் 10 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். அடுத்து களம் இறங்கிய றெய்னா 11 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் அடங்கலாக) 13 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழக்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 6 ஓவர்களில் 37 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களை இழந்தது.

எனினும் 3ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ஹைடன்-பத்ரிநாத் ஜோடி அதிரடியான இணைப்பாட்டத்தின் மூலம் சரிவிலிருந்து மீண்ட சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வெற்றியை நெருங்கியது.

இந்த ஜோடி 65 பந்துகளில் 89 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது மத்யூ ஹைடன் 44 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 48 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழந்தார்.

தொடர்ந்து ஓரம் களம் இறங்க மறுமுனையில் பத்ரிநாத் தனது 38ஆவது பந்தில் அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

இந்நிலையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 18.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 141 ஓட்டங்களை குவித்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் சுப்பிரமணியம் பத்ரிநாத் 41 பந்துகளில் (9 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 59 ஓட்டங்களையும் ஜேக்கப் ஓரம் ஒரு ஓட்டத்தினையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் அமீற் சிங், திரிவேடி மற்றும் அணித்தலைவர் ஷேன் வோர்ன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.


இப்போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் சுப்பிரமணியம் பத்ரிநாத் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தான் விளையாடிய 10ஆவது போட்டியில் 6ஆவது வெற்றியைப் பெற்றது.

இதேவேளைராஜஸ்தான் றோயல்ஸ் அணி தான் விளையாடிய 10ஆவது போட்டியில் 6ஆவது தோல்வியை சந்தித்தது.

(5)

# மஹேல-சொகால் அசத்தல் பஞ்சாப் அணி திரில் வெற்றி



(கிம்பேர்லி)

சொகால், ஜெயவர்த்தனாவின் சிறப்பான துடுப்பாட்டம் கைகொடுக்க கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியன்பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பின் இரண்டாவது இருபது -20 தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று கிம்பேர்லியில் நடைபெற்ற லீக் சுற்றின் 36 ஆவது போட்டியில் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் யுவராஜ் சிங் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கிங்ஸ்லெவின் பஞ்சாப் அணித்தலைவர் யுவராஜ் சிங் முதலில் களத்தடுப்பைதீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத் தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி அன்ரூ சைமண்ட்ஸின் அதிரடியான அரைச் சதத்தின் மூலம் 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களையிழந்து 168 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அன்ரூ சைமண்ட்ஸ் ஆட்டமிழக்காமல் 36 பந்துகளில் (2 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக) 60 ஓட்டங்களையும் வேணு கோபால் ராவ் 25 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 32 ஓட்டங்களையும் ரி.எஸ். சுமன் 17 பந்துகளில் (ஒரு பவுண்டரி 2 சிக்ஸர் அடங்கலாக) 27 ஓட்டங்களையும் அணித்தலைவர் கில்கிறிஸ்ட் 20, கிப்ஸ் 13 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் பிரெட் லீ, சிறிசாந்த், சாவ்லா மற்றும் மோட்டா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 169 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி சொகால்-மஹேல ஜெயவர்த்தனாவின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் 19.5 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 169 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் மஹேல ஜெயவர்த்தனா 28 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 43 ஓட்டங்களையும் சொகால் 17 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 30 ஓட்டங்களையும் சங்கக்கார 18 பந்துகளில் (ஒரு பவுண்டரி ஒரு, சிக்ஸர் அடங்கலாக) 25 ஓட்டங்களையும் அணித் தலைவர் யுவராஜ் சிங் 18 ஓட்டங்களையும் பிரேட் லீ ஆட்டமிழக்காமல் 10 பந்துகளில் (ஒரு சிக்ஸர் அடங்கலாக) 14 ஓட்டங்களையும் குவித்தார்.

பந்து வீச்சில் சொக்கைப், றோகித் சர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ரி.எஸ்.சுமன் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இப் போட்டியில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியின் மஹேல ஜெயவர்த்தனா ஆட்டநாயகனாக தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி தான் விளையாடிய 10 ஆவது போட்டியில் பெற்ற 5ஆவது வெற்றி இதுவாகும்.

இதேவேளை டெக்கான் சார்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 9 ஆவது போட்டியில் சந்தித்த 4ஆவது தோல்வி இதுவாகும்.

(5)



வன்னிப் படைத் தலைமையகத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா மற்றும் அதிகாரிகள் வன்னி இராணுவத் தளபதியால் அழைத்துச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம்.

# அரசாங்கப் பகுதிக்கு இதுவரை ஒரு இலட்சத்து 96 ஆயிரம் பேர் வருகை

## ஐ.நா. தெரிவிப்பு

(நியூயோர்க்)

மோதல் பிரதேசங்களிலிருந்து படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு ஒரு இலட்சத்து 96 ஆயிரத்து 44 பொது மக்கள் இது வரையில் இடம்பெயர்ந்து வந்திருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான இணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 10 ஆயிரத்து 741 பேர் நோயாளர்கள் மற்றும் போர்க் காயங்களுக்கு உள்ளானவர்கள் மற்றும் அவர்களின் உதவியாளர்கள் எனவும் கூறியுள்ளது.

இவர்கள் வவுனியா, மன்னார், செட்டிக்குளம், திருகோணமலை, புல்மோட்டை, கந்தளாய், தம்பலகாமம், பொலநறுவை, பதவியா, கண்டி ஆகிய மருத்துவமனைகளிலும் கொழும்பு தேசிய மருத்துவமனை, மகரகம மருத்துவமனை ஆகியவற்றி லும் சிகிச்சை பெற்று வருவதாகவும் ஐ.நா மனிதாபிமான விவகாரங்களுக்கான இணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது. (ந-14)

## படையினரும் புலிகளும் கடலில் மோதல்

(கொழும்பு)

முல்லைத்தீவுக் கடற்பகுதியில் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகளின் இரு படகுகளை தாம் தாக்கி அழித்ததோடு இரு படகுகளை கைப்பற்றியிருப்பதாக படையினர் அறிவித்துள்ளனர் .

இம் மோதலின் போது 14 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாகவும் படையினர் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் படகுகள் நேற்று அதிகாலை 3 மணியளவில் கடற் படையினர் மீது தாக்குதல் மேற்கொள்வதற்காக வந்த வேளையே இம் மோதல் இடம்பெற்றதாக தெரிவித்துள்ள படையினர் விடுதலைப் புலிகள் கடும் எதிர்ப்பினை காட்டினார்கள் என்றும் தெரிவித்துள்ளனர்.

இதன்போது தரைப்பகுதியிலும் மோதல்கள் இடம்பெற்றதாகவும் அதன் போது கொல்லப்பட்ட 33 விடுதலைப் புலிகளின் சடலங்களை தாம் கைப்பற்றியுள்ளதாகவும் படையினர் தெரிவித்துள்ளனர். (ந-14)

## பிரபாகரன் தப்பிச்...

வகையைச் சேர்ந்தது. படகின் முன் பகுதியில் என்ஜினும் இதர கருவிகளும் கூடிய அறையும் இருந்தது.

படகின் கடைசிப் பகுதியில் குண்டுகள் துளைக்க முடியாத உலோக அறை இருந்தது. ரெயில் தண்டவாளம் போல் இருந்த பாதைகளுக்கு மேல் அந்த அறை தூக்கி வைக்கப்பட்டிருந்தது.

படகை தொடும் அளவில் ஒரு வாய்க்கால் வெட்டப்பட்டிருந்தது. நெருக்கடியான நேரத்தில் இந்த நீர்மூழ்கிப் படகினை கரையில் இருந்து நேரடியாக கடலுக்குள் செலுத்தி விரைவில் தப்பிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பிரத்தியேக வாய்க்காலை யாரும் கண்டு பிடிக்க முடியாத வகையில் அதன் இரு புறங்களிலும் உலோகத் தகடுகள் பொருத்தப்பட்டு மறைக்கப்பட்டிருந்தன எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை தப்பிக்க வைப்பதற்காகவே இந்த நீர்மூழ்கிப் படகு தயார் நிலையில் இருந்ததாகவும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (ந-5)

## ஐரோ. பிரதி...

ஆகியவற்றின் பிரதிநிதிகள் இக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இலங்கையின் அரசியல்,மனித உரிமைகள்,மனிதாபிமான நிலைவரங்கள்,வர்த்தக அபிவிருத்தி உதவிகள் மற்றும் இருதரப்பு உறவுகள் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் குறித்து இவர்களுடன் பேசப்பட இருப்பதாக வெளிநாட்டமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (ந-5)

## கப்பல் சேவை...

கொண்டவர்களும் மாவட்ட செயலகத்தில் கப்பல் சேவைக்காக பதிவினை மேற்கொண்டவர்களும் மற்றும் அவசர தேவையின் நிமிர்த்தம் செல்லவிருப்பவர்களும் நாளை காலை 9 மணிக்கு யாழ்.புகையிரத நிலையத்திற்கு சமுகமளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (ந-5)

## போர்ப் பகுதி நிலைமை...

அவதானிப்பதற்கும் அனைத் துலக விசாரணைக்குழு ஒன்று அவசரமாக அமைக்கப்பட வேண்டும் என இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் நிபுணர்களான பிலிப்ஸ் அல்ஸ்ட்டன், ஆனந்த் குறோவர், ஒலிவர் டி ஸ்சட்டர் மற்றும் கற்றீனா டி அல்புகுவிக் ஆகியோர் வெளியிட்ட அறிக்கையிலே மனித உரிமைகள் பேரவையிடம் இந்த அவசர கோரிக்கையை விடுக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கையில் உருவாகியிருக்கும் தற்போதைய மோசமான நிலைமைகளுக்கு தீர்வைக் காணும் வகையில் அதனை ஒரு அவசர விடயமாக கருதி இவ்வாறான ஆணைக் குழுவை மனித உரிமைகள் பேரவை அமைக்க வேண்டும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கை அரசாங்கமானது, மனித உரிமைகள் மற்றும் அனைத்துலக மனிதாபிமானச் சட்டங்களின் கீழ் தனக்குள்ள கடமைப்பாட்டை எந்தளவுக்கு மதித்துச் செயற்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத் தக்கூடிய நம்பகமான ஆதாரங்களை அனைத்துலக சமூகத்தின் முன்பாக முன் வைக்க வேண்டும் எனவும் அந்த குழு தமது அறிக்கையில் கோரியுள்ளது. (ந-5)

## மருத்துவமனைகள் மீது...

மருத்துவமனைகள்மீது குறைந்த பட்சம் 30தடவைகளாவது தாக்குதல் இடம்பெற்றிருப்பது தொடர்பாக தகவல் கிடைத்துள்ளது.

இவை அனைத்திலும் கொடூரமான சம்பவமாக மே 2ஆம் திகதி நடைபெற்ற தாக்குதலைக் குறிப்பிடும் மனித உரிமைகள் கண்காணிப்பகம், அன்றைய நாள் முள்ளிவாய்க்கால் மருத்துவமனையில் 68 பேர் கொல்லப்பட்டும் 87 பேர் படுகாயமடைந்திருப்பதாகவும் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

மருத்துவமனைகள் என்பது எறிகணைத் தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பை தேடிக் கொள்வதற்கான இடம் எனத் தெரிவித்திருக்கும் மனித உரிமைகள் கண்காணிப்பக ஆசியப் பிராந்திய பணிப்பாளர் பிராட் அடம்ஸ், அது தாக்குதலுக்கான ஒரு இலக்கல்ல எனவும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

மருத்துவர்களும் தாதியர்களும் பெருமளவு நோயாளிகளும் குவிந்துள்ள நிலையில் குறைந்த பட்ச உபகரணங்களுடன் தமது பணியைச் செய்து கொண்டிருக்கும் போது இராணுவம் இந்த மருத்துவ மனைகள் மீது தாக்குதலை நடத்தியிருக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார். (ந-5)

## இலங்கைத் தமிழ் மக்...

தமிழகமும் ஒன்று. தமிழக மக்களுடன் எங்கள் குடும்பத்தினருக்கு வரலாற்று தொடர்பு உள்ளது. இந்திரா,ராஜீவ் இதயத்தில் இடம் பிடித்தவர்கள் தமிழர்கள். தமிழகத்திலுள்ள தமிழர்கள்மட்டுமில்லாது அமெரிக்கா, ஐரோப்பா, இலங்கையில் உள்ள தமிழர்களுக்கும் எங்கள் இதயத்தில்இடம் உள்ளது. அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இதற்கான தீர்வு ஜனநாயக முறைப்படி இருக்க வேண்டும்.

அனைத்து மக்களுக்கும் ஜனநாயக உரிமை வழங்கப்பட வேண்டும். இலங்கை தமிழர் பிரச்சினையைத் தீர்க்க ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு பல நடவடிக்கைகளை எடுத்தது.

இதன் பலனாக தமிழர்களுக்கு எதிராக இலங்கை இராணுவம் பயங்கர ஆயுதங்களை பயன்படுத்தவில்லை. தி.மு.கவுடன் சேர்ந்து இத் தேர்தலில் காங்கிரஸ் போட்டியிடுகிறது. நாங்கள்தான் இங்கு வெற்றி பெறுவோம் என்றார். (ந-5)

## இராணுவத் தளபதி...

ஜெகத் ஜெயசூரியா, இராணுவத் தளபதியையும் அவரது குழுவினரையும் வரவேற்று பாதுகாப்புப் படைகளின் தலைமையக மண்டபத்துக்கு அழைத்து சென்றார்.

அங்கு நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் வன்னி இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவுள்ள தளபதிகளைச் சந்தித்து போர் கள நிலைமைகள் தொடர்பாக விரிவான முறையில் ஆராய்ந்த இராணுவத் தளபதி,

அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக முக்கியமான உத்தரவுகள் சிலவற்றை அங்கு வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-3,5)

## இலங்கைத் தமிழர்...

தேர்தல் பிரசாரம் மேற்கொள்வதற்காக நேற்று சென்னை வந்த பிரதமர் மன்மோகன் சிங் ஊடகவியலாளர்களை சந்தித்தபோது, இலங்கை தமிழர்களை பாதுகாப்பதற்கு ஏன் இந்திய இராணுவத்தை அனுப்பக் கூடாது என ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை சுயாதிபத்தியம் பெற்ற ஒரு நாடு. அதற்கு இராணுவம் அனுப்புவது என்பதெல்லாம் அவ்வளவு எளிதான விடயம் அல்ல. சர்வதேச சட்டங்கள் இருக்கின்றன என்பதை இராணுவத்தை அங்கு அனுப்ப வேண்டும் எனக் கோருபவர்கள் உணர வேண்டும்.

இலங்கை தமிழர்கள் மீது அனைத்து இந்தியாவிலும் அனுதாபம் இருக்கிறது. இலங்கை தமிழர்கள் அனைத்து உரிமைகளையும் பெற்று கண்ணியத்துடன் வாழ வேண்டும் என்று நாங்கள் எல்லோரும் விரும்புகிறோம். ஆனால் சுயாதிபத்தியம் பெற்ற ஒரு நாட்டுப் பிரச்சினையில் தலையிடுவதில் வரையறைகள் உள்ளன. அவற்றைத் தாண்ட முடியாது. அறிவார்ந்த தமிழ் நாட்டு மக்கள் அதனை உணர்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு தேடப்படும் குற்றவாளி. ஆனால் இப்போது அதுவல்ல பிரச்சினை. தமிழர்கள் எல்லா நலனும் பெற்று வாழ வேண்டும். அவர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வேண்டும். இராணுவத் தீர்வு அல்ல என்பதை இலங்கை மக்களும் அரசும் உணர வேண்டும் என்றும் பிரதமர் மன்மோகன் சிங் குறிப்பிட்டார்.

இதேவேளை இலங்கை தமிழர்களைப் பாதுகாப்பதற்கும் அவர்களுக்கு தமிழீழத்தை அமைத்துக் கொடுப்பதற்கும் தாம் தேர்தலில் வெற்றி பெறுவதோடு மத்தியில் தாம் சொல்வதை கேட்கும் அரசு அமைந்தால் இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்புவேன் என அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா பிரசாரக் கூட்டங்களில் கூறி வந்த நிலையில் பிரதமரின் இந்த அறிவிப்பு வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது. (ந-5,14)

**மகோகனி, சப்பு பலகை, தீராந்தி வகைகள் விற்பனைக்குண்டு**

எம்மிடம் 4X3, 2X2, 2X1 மற்றும் 8" 9" 10" பலகை வகைகள் (பீடிங் மோல்டிங்) சகாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு:
இல. 194, K.K.S. வீதி,
கடைத்தெரு
பிள்ளையார் கோவில் முன்பாக
T.P.: 0719134767, 0777073702
(2714)

**நோய் தீர்க்கும் யோகாசனம்**

இந்த நூல் வெளிவந்து விற்பனையாகிறது.

விலை: ரூபாய் 250

ஆக்கம்: யோகா மாஸ்ரர்

ஆ.பொ.மு.ஏரம்பமூர்த்தி தமிழர் சோதிட ஆராய்ச்சிக்கழக வெளியீடு.

412, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(2710)

**விற்பனைக்கு**

சுதுமலை தெற்கில் நல்ல சுற்றாடலில் சகல வசதிகளும் கொண்ட ஒரு வீடும் அத்துடன் சற்று குறையுள்ள புதிய வீடொன்றும் சகாய விலையில் உடன் விற்பனைக்குண்டு. தரகரின்றி நேரடித் தொடர்பிற்கு;

க.சீவறட்ணம்
சம்பந்தர் ஒழுங்கை,
சுதுமலை தெற்கு.
(2709)

**24 ஆண்டுகால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்**

**கலாலயா** பயிற்சியகம்

பெருமாள் கோயிலுக்கு அண்மையில்; யாழ்ப்பாணம்.

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

* **3 மாத கால** கேக் ஐசிங் (7 வகை. 25 அமைப்புகளில்), ஐசிங் பூக்கள், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரங்கள் (50 வகை), பப்றிக் வர்ணம் தீட்டுதல், பூவேலை, கைவேலை, Saree Works. ***கூந்தல் அலங்கார பயிற்சிக்காலத்தின் நடுப்பகுதியில்*** *Facials*, மணமகள் அலங்காரம், Manicure, Pedicure, முடி அயன் செய்தல், வெட்டுதல், சுருட்டுதல், நிறமூட்டுதல் வகுப்புகள் ஆரம்பமாகும்.
* தையலில் அடிப்படை அறிவு அற்றவர்களுக்கான **6 மாத கால** உடை தயாரித்தல் வகுப்புகள். ➡ மேற்படி பயிற்சிகள் முடிந்தபின்னர் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
* தையல் தெரிந்தவர்களுக்கான **2** வாரகால சாறி பிளவுஸ், சுரிதார் வகுப்புக்கள்

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம் : 11-05-2009 காலை 9.00 மணி**

*மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.* **பதிவாளர்.**

**STR COMPUTER SYSTEM**
384, Navalar Road, Nallur, Jaffna
Tel: 021-2224459, 021-4590775, 0774192275, Fax :021-2224460.

**COMPUTER CLASSES**

**Certificat in Internet & E-Mail**
Chatting, Dawnloding, Web & E-Mail Address Creating, Net Calling.

**Computer repairing**

சகலவிதமான கணணிகளும் உங்கள் வீடுகளுக்கோ, அல்லது நிறுவனங்களுக்கோ வந்து ஒரே நாட்களில் திருத்திக் கொடுக்கப்படும்.
(C-2456)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.05.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.